# வக்கீல்

58

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
... 1956

**1955**

இதழ் 6

(டிசம்பர்)

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

**இந்த இதழில்**

உணவுப் பண்டக் கலப்படத் தடைச் சட்டம்.

தீண்டாமைக் குற்றச் சட்டம்.

விலை அணா 4.

(All Rights Reserved.)

**THE VAKIL ✶ TAMIL LAW MAGAZINE**

## "வக்கீல்"

**பொது மக்களுக்கான**

**உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை**

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

**ஆசிரியர் கமிட்டி**

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,
[ஆசிரியர்]

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு இலங்கை உள்பட ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருடச் சந்தாதார்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருடச் சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும். சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்

தபால் பெட்டி 26, கும்பகோணம்

(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.


தரத்தில் உயர்ந்ததும்
சலவைக்கு மிகச் சிறந்ததும்
பெரும்பான்மையோர் விரும்பி
வாங்குவதும்




எப்பொழுதும் வாங்கி
உபயோகியுங்கள்.

—: தயாரிப்பு :—

M. K. சோப் ஒர்க்ஸ்

கும்பேஸ்வரர் தெற்குவீதி

கும்பகோணம்



அசல்

ஓம்பத்திவேலி பிரஸவ மருந்து

அசல் ஓம்பத்திவேலி பிரஸவமருந்தை வாங்கி கர்பிணிக்குக் கொடுத்து சௌபாக்கியத்தை அடைய விரும்புகிறோம். போலி மருந்துகளை வாங்கி ஏமாற வேண்டாம்.

அசல் பிரசவ மருந்து கிடைக்குமிடம்:—

ஓம்பத்திவேலி பிரஸவ மருந்து
காரியாலயம்

Director: C. P. S. Aravamudan,
54, மேட்டுத் தெரு
கும்பகோணம் S. India

விலை விபரம்:—

10 தினங்களுக்கு 10 பவுடர்
ரூ. 2 8 0

ஷை 10 மாத்திரை ரூ. 3 8 0

வி. பி. சார்ஜ் வேறு

வெண்சங்கு நறுமண சீயக்காய்த் தூள்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
MCK CO
REGD. No. 13817.

உரிமை
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல் - தஞ்சாவூர் ..

ஆடைகளை அழகு பெறச் செய்வது

★ அன்னகிளி ★

சோப்

— தயாரிப்பவர் —

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 22 :: தஞ்சாவூர்.

Guarented and High class

Lace Silk Sarees

For Variety and Moderate Price

**MARUTHI VILAS**

Ariya: *M. Ramasamy Ayyar*

PURE SILK JAVILI MERCHANT

**AYYAMPET**

TANJORE DISTRICT

# "வக்கீல்"

## பொருள் அடக்கம்

மலர் 7 *December 1955* இதழ் 6

குறிப்புகள்

தமிழ் நாட்டின் அவதி 4

இமயம் மறைகின்றது 4

இரண்டு ஓநாய்கள்! 4

புதிய சட்டங்கள்

1955 - சென்னைச் சட்டங்கள் 5

உணவுப் பண்டக் கலப்படத் தடைச் சட்டம் (1954) 7

தீண்டாமைக் குற்றச் சட்டம் 13

சென்னை நீர்ப்பாசன நில அபிவிருத்திக் கட்டண விதிப்புச் சட்டம் 15

கேள்வியும் – பதிலும் 17

வழக்கும் – தீர்ப்பும்

* இந்துக் குடும்பத் தலைவர், குடும்பத்திற்காகச் சொத்து வாங்கினர். ஒரு கெடுவுக்குள் கிரயம் செய்தவர் கிரயத் தொகையைக் கொடுத்துவிட்டால், அச்சொத்தை அவருக்கே மறுசாசனம் செய்துவிடுவதாக அப்போதே ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் குடும்பத்தைக்கட்டுப்படுத்துமா? அவசியமில்லாமல் குடும்பத்தலைவர் குடும்பச் சொத்தை மறு கிரயம் செய்ய முடியுமா? 19

* விற்பனை வரிச்சட்டப்படி லைசென்சு வாங்கிக்கொண்ட மில் நூல் வியாபாரி கள்ளமார்க்கெட்டில் பெருத்த வியாபாரம் செய்தார். அவர் வரி அதிகாரிகளுக்குக் காண்பித்தது ஒரு தனிக் கணக்கு. அவருடைய லைசென்சை ரத்து செய்யாமலே, அவருக்கு விற்பனை வரி விதித்தது செல்லுமா? 20

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187742
சென்னை-600 008

# 'வக்கீல்'

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 7 டிசம்பர் 1955 இதழ் 6

## தமிழ் நாட்டின் அவதி

தமிழ் நாட்டின் நெற் களஞ்சியமென வழங்கும் தஞ்சை ஜில்லாவைக் கடும் புயல் ஒன்று தாக்கி மூன்று ஆண்டுகள் முடிவதற்குள், தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் பலவற்றை மற்றொரு புயல் கன மழையுடன் கபடமாகச் சூறையாடி விட்டது. இன்று தஞ்சை, திருச்சி, மதுரை, ராமனுதபுரம் ஜில்லாக்களின் கடலோரப் பிரதேசங்கள் யாவும் கோரக்காட்சியளிக்கின்றன. கடல் பொங்கி உட்புகுந்து தன்னுடன் கூடவே அழைத்துச் சென்ற பாமர மக்களின் எண்ணிக்கையானது கணக்குக்கு வர வழியில்லை. அது தினசரிப் பத்திரிகைகளிலும் வராது. ஆனால், கடலுடன் போக மறுத்த சவங்களின் எண்ணிக்கைதான் அதிகார பூர்வமான செய்தியாக வருகிறது. அவதிப்படும் மக்களுக்கு விரைந்தோடி ஆறுதல் சொல்லி, உடனடியாக உதவி அளிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்த நமது சென்னை முதலமைச்சர் திரு. காமராஜரைத் தமிழகம் மறவாது.

ஆனால் இச் சந்தர்ப்பத்தில் நாம் வேறு ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். விஞ்ஞான ரீதியாக புயல் வருவதையும் கடல் பொங்குவதையும் முன் கூட்டியே அறிந்துகொள்ளுவது சாத்தியமானால், நெருங்கிக்கொண்டிருக்கும் அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற ஏதாவது துரித நடவடிக்கைகள் எடுப்பது சாத்தியமா என்பதை நமது தலைவர்கள் ஆராயவேண்டும். சென்னையில் வெளியாகும் தினசரிகளில், ஒரு ஓரத்தில் அச்சடிக்கப் பட்டிருக்கும் "புயல் வருகிறது" என்ற அபாயச் செய்தியானது வேதாரண்யம் அல்லது கோடிக்கரையில் வசிக்கும் பாமர மக்களுக்குச் சமயத்தில் எப்படி எட்டும்? புயல் அபாயம் தெரிந்தவுடனேயே, அபாயம் ஏற்படக்கூடிய பகுதிகளை, யுத்த காலத்தில் எப்படியோ அதைப் போலவே, சில மணி நேரங்களுக்குள் காலி செய்யும்படி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முடியுமா என்பதை நமது சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும்.

## இமயம் மறைகின்றது!

இந்தியாவின் வடக்கு எல்லையைத் தொடும் நாடுகளில் ருஷ்யாவும் ஒன்று. ஆனால் நடைமுறையில் ருஷ்யா எங்கேயோ இருப்பதாக நாம் நினைத்து வருகிறோம். ஏனென்றால் ருஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் நடுவே நிற்பது இமய மலை. இதை நாம் இனி பொருட்படுத்த வேண்டியதில்லை என்பதை சுட்டிக்காட்டுவதைப்போல, சமீபத்தில் ருஷ்ய பிரதமர் புல்கானினும், மற்ற ருஷ்யத் தலைவர்களும், ருஷ்யத் தென் எல்லையிலிருந்து ஆகாயவிமானத்தின் மூலம் இமயத்தை ஒரே தாண்டலாகத் தாண்டி, சில மணி நேரத்தில் டில்லி வந்துக் குதித்தனர். இனி இதே விதமாக ஆகாயத்தில் நமக்கும் ருஷ்யாவுக்கும் ஒரு குறுக்குப் பாதை ஏற்பட்டாலும் ஏற்படலாம். இமயம் மறைகின்றது!

## இரண்டு ஓநாய்கள்!

ருஷ்யத் தலைவர்களுக்கு இந்திய மக்கள் உள்ளம் குளிர்ந்து அளித்த மகத்தான வரவேற்பை இந்நாடு இதுவரை வேறு எவருக்கும் அளிக்கவில்லை. இதைக் கண்டு அமெரிக்கர்களும், பிரிட்டிஷாரும் பொச்சரிப்பு அடைகின்றனர்; தாறுமாருக உளருகின்றனர்! ருஷ்ய பிரதமர் நம்மை ஏமாற்ற ஒரு கபட நாடகமாடுகிறார் என்று பேத்துகின்றனர்! ஒரு ஆடு நனைகிறதே என்று இரண்டு ஓநாய்கள் வருத்தப்படுகின்றன!

# புதிய சட்டங்கள்

சுருக்கமும் - வரிசையாகவும்

## 1955-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

[சென்னை சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

### 14. சென்னை கோர்ட்டுபீசுக் கட்டண — வியாஜ்ய மதிப்பீடுச் சட்டம்

Madras Court-fees and Suits Valuation Act 1955 (16-5-1955) இச் சட்டம் "வக்கீல்" — 1955 இதழ் 3-ல் விவரமாக விளக்கப்பட்டுள்ளது.

### 15. சென்னை அரசாங்கப் பொதுச் செலவுச் சட்டம்

Madras Appropriation (No. 3) Act 1955 (24-8-1955) 1-4-1955 முதல் ஆரம்பமான நிதி வருடத்தில் சென்னை ராஜ்யப் பொது நிதியிலிருந்து ஏற்கனவே அனுமதிக்கப்பட்டது தவிர மேற்கொண்டு ரூ. 98, 54, 123 செலவு செய்ய சென்னை அரசாங்கத்திற்கு அனுமதியளிக்கும் சட்டம்.

### 16. சென்னை நகர போலீஸ் சட்டத் திருத்தம் — சென்னைச் சூதாட்டச் சட்டத் திருத்தம்

Madras City Police and gaming Amendment Act 1955 (31-8-1955) சில வகைச் சூதாட்டங்களைத் தடுக்கும் பொருட்டு இது சம்பந்தமாக ஏற்கனவே உள்ள மேற்கண்ட இரண்டு சட்டங்களின் ஷரத்துக்களும் திருத்தப்பட்டிருக்கின்றன.

### 17. சென்னை மலைப்பிரதேச மரங்கள் பாதுகாப்புச் சட்டம்.

Madras Hill Stations (Preservation of Trees) Act 1955. (2—9—1955)

இச்சட்டமானது (1) கூனூர் முனிசிபாலிடி (2) கொடைக்கானல் முனிசிபாலிடி (3) கோட்டகிரி பஞ்சாயத்து (4) உதகமண்டலம் முனிசிபாலிடி (5) ஏர்க்காடு பஞ்சாயத்து இவைகளில் அடங்கிய பிரதேசங்களில் மட்டில்தான் அமுலில் இருக்கும். ஆனால் இச் சட்டத்தை வேறு மலைப்பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்க சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இச்சட்டம் அமுலில் இருக்கும் இடங்களில் எந்த விஸ்தீர்ணத்திற்கும் விதிவிலக்கு அளிக்கவும், பக்கத்து நிலங்களுக்கு இச்சட்டத்தை விஸ்தரிக்கவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

இச்சட்டம் அமுலில் இருக்கும் இடங்களில் எவரும், முன்னதாகவே கலெக்டரிடம் எழுத்து மூலம் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் எவ்வித மரங்களையும் வெட்டக் கூடாது; வேரோடு பெயர்க்கவும் கொளுத்தவும் கூடாது. அவ்விதம் வேறு ஒருவரைக்கொண்டு செய்யவும் கூடாது. உயிருக்கோ சொத்துக்கோ அபாயம் விளைவிக்கக் கூடிய மரங்களையும், பட்டுப் போன மரங்களையும், நோய்வாய்ப்பட்ட மரங்களையும், காற்றில் விழுந்த மரங்களையும், முதிர்ச்சியடைந்த மரங்களையும் வெட்டக் கலெக்டர் அனுமதி மறுக்கப்பட மாட்டாது. முதிர்ந்த மரங்களை வெட்ட அனுமதி கொடுக்கும் போது, மறுபடியும் அதே விதமான மரங்களையோ வேறு மரங்களையோ பயிர்செய்ய வேண்டுமென்று நிபந்தனை விதிக்கவும், மரம் ஒன்றுக்கு ரூ. 10க்கு அதிகப்படாத தொகையை அதற்காக ரொக்க ஜாமீனாகக் கட்டும்படிக்கும் நிபந்தனைகள் விதிக்கக் கலெக்டருக்கு அதிகாரம் இருக்கிறது. மேலும் எவரும் மரங்களின் கிளைகளை வெட்டவோ சேதப்படுத்தவோ கூடாது. ஆனால் சாதாரணமாக விவசாய வழக்கத்தை ஒட்டி கிளை கழிப்பதற்குத் தடை இல்லை. தவிர மூன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட சரிவுள்ள நிலங்களில் மரங்கள் வளர்ப்பதைத் தவிர வேறு எவ்விதமான சாகுப்படியும் செய்யக்கூடாது. மூன்றில் ஒன்றுக்குக் குறைவான சரிவு உள்ள நிலங்களில் புதிதாகச் சாகுப்டி செய்யவும் கலெக்டருடைய முன் அனுமதி வேண்டும். இவ்வித நிலங்களில் ஏற்கனவே சாகுபடி செய்து வருபவர்களும் இச்சட்டம் அமுலுக்கு வந்த ஒரு வருடத்திற்குப் பிறகு, கலெக்டருடைய அனுமதி வாங்கிக்கொண்டுதான் சாகுபடி செய்யவேண்டும்.

கலெக்டருக்கு மனுக்கொடுப்பது பற்றி விதிகள் ஏற்படும். கலெக்டருடைய அனுமதி மறுக்கப்பட்டால் இரண்டு மாதங்களுக்குள்

அப்பீல் செய்யலாம். யாருக்கு அப்பீல் செய்ய வேண்டுமென்று விதிகளில் குறிப்பிடப்படும்.

இச்சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக நடப்பது குற்றமாகும். ரூ. 5000 வரை அபராதம் விதிக்கப்படலாம். இச்சட்டப்படி கலெக்டருடைய அதிகாரங்களை வேறு ரிவின்யூ அதிகாரிகளுக்கு மாற்றிக்கொடுக்க கலெக்டருக்கு உரிமை உண்டு.

இச்சட்டம் அமுலில் இருக்கும் மேற்கண்ட ஐந்து இடங்களிலும் நிலம் வைத்திருப்பவர்கள் இச்சட்ட ஷரத்துக்களை விவரமாக அறிந்து கொள்ளுவது மிக அவசியமாகும்.

## 18. விற்பனை வரிச் சட்டத் திருத்தம்

Madras General Sales Tax (Second Amendment) Act 1955. (10-9-1955) 1955-ம் வருடத்திய 13-வது சென்னைச் சட்டத்தால் பொது விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 5ல் இரண்டு புதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன. ("வக்கீல்" 1955 இதழ் 4 பக்கம் 6 பார்க்கவும்.) அதாவது, சிகார் சுருட்டு முதலியவற்றை சென்னை ராஜ்யத்தில் முதல் முதலாக விற்கும் வியாபாரியும், கச்சாப் புகையிலையைச் சென்னை ராஜ்யத்தில் முதல் முதலாக வாங்கும் வியாபாரியும் ரூ. 1-க்கு 6 தம்படி வீதம் விற்பனைவரி கொடுக்க வேண்டுமென்று ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன. ஆனல் வருடம் ஒன்றுக்கு ரூ. 10000க்குக்குறைவாக மொத்த வியாபாரம் செய்யும் வியாபாரியானவர் விற்பனைவரியே கொடுக்கவேண்டியதில்லை என்று ஏற்கனவே ஒரு பொது விதி விலக்கு இருப்பதால், இவ் விதிவிலக்குக் குட்படாத எந்த வியாபாரியானவர் மேற்கண்ட சரக்குகளை முதல் முதலாக விற்கின்றாரோ அல்லது வாங்குகிறாரோ அவர்தான் இப் புதிய வரியைக் கொடுக்க வேண்டுமென்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக சென்னை ராஜ்யத்தில் முதல் முதலாக சுருட்டு விற்கும் ஒரு வியாபாரிக்கு ஒரு வருடத்தில் ரூ. 10,000க்குக் குறைவாக மொத்த வியாபாரம் நடந்தால் அவர் யாதொரு விற்பனை வரியும் கொடுக்க வேண்டியதில்லை. அவரிடமிருந்து அச் சுருட்டை வாங்கி விற்கும் வேறு ஒரு வியாபாரியானவர் ரூ. 10,000க்கு மேல் மொத்த வியாபாரம் செய்யும் வியாபாரியாக இருந்தால் அவர் மேற்கண்டபடி ரூ. 1க்கு 6தம்படி வீதம் வரி கொடுக்க வேண்டும். பிறகு அதே சுருட்டை விற்கும் எந்த வியாபாரியும் இவ் வரியைக் கொடுக்க வேண்டியதில்லை.

## 19. சென்னை நகர வாடகைதார் (குடிக் கூலிக்காரர்) பாதுகாப்புச் சட்டத் திருத்தம். வேறு முனிசிபாலிடிகளுக்கும் விஸ்தரிக்க அதிகாரம். வேறு ஒருவருடைய காலி நிலத்தில் வீடு கட்டி குடியிருப் பவர்களுக்குப் பாதுகாப்பு)

Madras City Tenants Protection Amendment Act 1955 (12-9-1955) இது வரை சென்னை பட்டணத்தில் மட்டில் அமுலில் இருந்த 1922-ம் வருடத்திய 3-வது சென்னைச் சட்டமாகிய சென்னை நகர குடிக் கூலிக்காரர் பாதுகாப்புச் சட்டத்தை மற்ற எந்த முனிசிபாலிடிக்கும், சென்னைப் பட்டணத்திலிருந்தோ அல்லது வேறு முனிசிபாலிடியிலிருந்தோ ஐந்து மைலுக்குட்பட்ட குறிப்பிட்ட எந்த கிராமத்திற்கும் இச்சட்டத்தை விஸ்தரிக்க, இத்திருத்தச் சட்டத்தால், சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வேறு ஒருவருக்குச் சொந்தமான காலி நிலத்தை குத்தகைக்கு ஒப்புக்கொண்டு அதில் கட்டடங்கள் கட்டி அநுபவிக்கும் குடிக்கூலிக் காரர்களை காலி நிலத்தின் சொந்தக்காரர் கெடு முடிவில் அகற்றும்போது கட்டடத்தின் காலக்கிரயத்தைக் கொடுக்க வேண்டுமென்றோ அல்லது நிலக்காரர் காலி நிலத்திற்கான நியாய வாடகையை மட்டில் வாங்கிக்கொண்டு வர வேண்டுமென்றோ உத்தரவிட கோர்ட்டுக்கு அதிகாரமளிக்கும் சென்னை சட்டம் இப்போது வேறு முனிசிபாலிடிகளுக்கும் விஸ்தரிக்கப் படலாம். இச்சட்ட ஷரத்துக்கள் பின்பு விவரமாக விளக்கப்படும்.

## 20. சென்னை ஜில்லா முனிசிபாலிடிகள் சட்டத் திருத்தம்

Madras District Municipalities Amendment Act 1955. (21-9-1955) முனிசிபல் எல்லைக்குள் இருக்கும் விவசாய நிலங்களுக்கு நிலவரியை மட்டில் ஆதாரமாகக் கொண்டு, அதாவது நிலவரியின் ஒரு வீதமே அந்நிலங்களுக்கு முனிசிபல் வரியாக இருக்கும்படி வரி விதிக்கவேண்டுமென்று முனிசிபாலிடிச்சட்டத்தின் செக்ஷன் 81 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனல் நிலவரியின் எவ்வளவு வீதத்திற்கு மேல் முனிசிபல் வரி இருக்கக் கூடாதென்று விதிகள் மூலம் நிர்ணயம் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

# உணவுப் பண்டக் கலப்படத் தடைச் சட்டம் (1954)

[The Prevention of Food Adulteration Act 1954. இச் சட்டம் நமது டில்லி பார்லிமெண்ட் சபையால் இயற்றப்பட்ட 1954-ம் வருடத்திய 37 வது சட்டம். ஜனாதிபதி அவர்கள் 29-9-1954ல் சம்மதம் கொடுத்து அத்தேதியிலேயே இது சட்டமாகி விட்டாலும், இச் சட்டம் அமுலுக்கு வரவேண்டிய தேதியை மத்திய சர்க்கார் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இச்சட்டத்திலேயே இருக்கிறது. அதை அனுசரித்து மத்திய சர்க்காரால் இச்சட்டம் 1-6-1955 தேதியில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் 27-10-1954 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் பாகம் III-Bல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தால் அளிக்கப் பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து மத்திய சர்க்காரால் 12-9-1955ல் விதிகள் இயற்றப் பட்டிருக்கின்றன. இவ்விதிகள் 9-11-1955 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I A ரூல் சப்ளிமெண்ட் 117 - 134 பக்கங்களில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.

நெய், எண்ணெய் முதலிய உள்பட எவ்வித உணவுப் பண்டங்களை வியாபாரம் செய்யும் வியாபாரிகளும் இச்சட்ட ஷரத்துக்களையும் விதிகளையும் நன்றாக கவனித்துக் கொள்ளுவது மிக அவசியமாகும். முன்பு சென்னை ராஜ்யத்தில் அமுலில் இருந்த ராஜ்யச் சட்டம் இச்சட்டத்தால் ரத்தாவதுடன் இம்மத்தியச் சட்ட ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு கடுமையான சிறைதண்டனையும் அபராத தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறதென்பதை நன்கு கவனிக்கவும். இச்சட்டத்திலும் விதிகளிலும் பொது மக்களும் வியாபாரிகளும் தெரிந்து கொள்ள வேண்டிய சில ஷரத்துக்கள் மட்டில் பெரும்படியாக விளக்கப் பட்டிருக்கின்றன.]

## இம்மத்தியச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் சென்னைச் சட்டம் ரத்தாயிற்று.

சென்னை ராஜ்யத்தில் அமுலில் இருந்தச் சென்னை கலப்புத் தடைச் சட்டம் (The Madras prevention of Adulteration Act) என்ற 1918-ம் வருடத்திய 3-வது சென்னைச் சட்டமானது இம்மத்தியச் சட்டம் காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலுக்கு வந்தவுடன் ரத்தாகி விட்டது. ஆனால் ரத்தான சென்னைச் சட்டத்தை அனுசரித்து ஏற்படுத்தப் பட்ட விதிகள், உபவிதிகள் முதலியவை மட்டில், அமுலில் இருக்கும். அதாவது இச் சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக அல்லாத பழைய சென்னை விதிகள் மட்டில், இச்சட்டத்தை அனுசரித்து ஏற்படும் விதிகளால் மாற்றப் படாமலோ, திருத்தப்படாமலோ, அல்லது ரத்துச் செய்யப்படாமலோ இருக்கும் வரை தான் அமுலில் இருக்கும். (செக்ஷன் 25.) இச் சட்டத்தை அனுசரித்து இப்போது மத்திய சர்க்காரால் சில விதிகளும் இயற்றப் பட்டு விட்டன என்பதும் கவனிக்கத்தக்கது.

## உணவுப் பண்டம் (Food) என்றால் என்ன?

உணவுப் பண்டங்களைக் கலந்து கெடுப்பது இச்சட்டத்தால் குற்றமாக்கப் பட்டிருப்பதால் "உணவுப் பண்டம்" என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். "உணவுப் பண்டம்" என்பதற்கு இச் சட்டத்தின் செக்ஷன் 2 (v) ஷரத்தில் அர்த்தம் சொல்லப் பட்டிருக்கிறது. மருந்துகள், நீர், இரண்டையும் தவிர, மனிதர்களுடைய உணவுக்கோ பானத்திற்கோ உபயோகிக்கப் படும் எந்தப் பண்டமும் இச் சட்டப்படி "உணவுப் பண்டம்" எனப்படும். மனித ஆகாரம் தயார் செய்வதற்குச் சாதாரணமாக உபயோகிக்கப்படும் எந்தப் பண்டமும் சரி, சுவை அல்லது வாசனைக்காகச் சேர்க்கப்படும் பண்டங்களும் சரி, ஊறுகாய் வகையறாவும் சரி "உணவுப் பண்டம்" என்பதில் சேர்ந்தவையே.

## "கலந்து கெடுப்பது" அல்லது "கலப்படம் செய்வது" (Adulterated) என்றால் என்ன?

உணவுப் பண்டங்களைக் "கலந்து கெடுப்பது" என்றால் என்ன என்று இச்சட்டத்தின் செக்ஷன் 2 (i) ஷரத்தில் அடங்கிய 12 உப ஷரத்துக்களால் மிக விவரமாகவும் நுட்பமாகவும் விளக்கப்பட்டிருக்கிறது. உணவுப் பண்டம் வாங்குபவர் எந்த தினுசு அல்லது ரகமுள்ள பண்டம் தமக்கு வேண்டுமென்று கேட்கிறாரோ, அதல்லாமல் அவருக்கு நஷ்டம் ஏற்படும் விதம் வேறு தினுசு அல்லது ரகமுள்ள பண்டத்தை அவரிடம் விற்பது 'கலப்படம்' செய்யப்பட்ட உணவுப் பண்டத்தை விற்பதாகும். அல்லது எந்த தினிசு அல்லது ரகத்தைச் சேர்ந்ததென்று வியாபாரியால் சொல்லப்படும் உணவுப் பண்டமானது உண்மையில் வேறு தினிசு அல்லது ரகத்தைச் சேர்ந்த

தாக் இருந்தாலும் அவ்வியாபாரியானவர் 'கலப்படம்' செய்யப்பட்ட உணவுப் பண்டத்தை விற்பதாகும். ஒரு உணவுப் பண்டத்துடன் அதன் தன்மை அல்லது ரகத்தை மாற்றிவிடக் கூடிய வேறு ஒரு பண்டம் கலந்திருந்தாலும் அதுவும் 'கலப்படம்' செய்வதாகும். ஒரு உணவுப் பண்டத்தின் தன்மை, தினிசு அல்லது ரகத்தையே கெடுத்து விடும்படி குறைந்த ரகமுள்ள சரக்கையோ, அல்லது மலிவான சரக்கையோ முற்றிலும் மாற்றி வைத்தாலும் சரி ஒரு பாகம் கலந்தாலும் சரி இது "கலப்படம்" செய்வதாகும். அல்லது ஒரு உணவுப் பண்டத்திலிருந்து அதன், தினிசு அல்லது ரகம் கெட்டுவிடும்படி அதிலுள்ள ஒரு சத்தை முற்றிலுமோ, ஒரு பாகமோ எடுத்துவிட்டாலும் அது 'கலப்படம்' செய்வதாகும்.

தேக ஆரோக்கியத்திற்குக் கெடுதி விளைவிக்கக் கூடிய சுகாதாரக் குறைவான நிலைமையில் தயார் செய்யப்பட்டும் 'பாக்' செய்யப்பட்டும் வைக்கப்பட்டிருக்கும் உணவு பண்டங்கள், அழுகிக் கெட்டுப்போன கறிகாய்களிலிருந்தும் நோய் பிடித்த பிராணிகளிலிருந்து தயார் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள், விஷப் பண்டங்கள் கலந்த உணவுப் பண்டங்கள், கலும்பு பிடிக்கக்கூடிய பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பண்டங்கள், விதிகளால் அனுமதிக்கப்பட்டிருக்கும் 'கலர்'களைத் தவிர வேறு 'கலர்'களும் விதிகளால் அனுமதிக்கப்பட்ட அள்வுக்கு அதிகமாகக் கலர் உபயோகிக்கப் பட்டிருக்கும் உணவுப் பண்டங்களும், பூச்சி வராமல் தடுப்பதற்காக விதிகளின்படி சேர்க்கக்கூடிய மருந்துகளைத் தவிர வேறு மருந்துகளைச் சேர்த்த உணவுப் பண்டங்கள், அதுவும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலாகச் சேர்க்கப்பட்ட உணவுப் பண்டங்கள், விதிகளின்படி ஒரு உணவுப் பண்டம் எவ்விதம் இருக்கவேண்டுமென்று இருந்தால் அதற்கு மாறுபாடாக இருக்கும் உணவுப் பண்டங்கள் இவைகள் எல்லாம் இச்சட்டப்படிக் கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களாகும்.

ஒரு உணவுப் பண்டத்துடன் வேறு ஒரு பண்டத்தைக் கலந்து கெடுப்பது தவிர, உணவுப் பண்டங்கள் தயார் செய்யும்விதம் வைக்கப்பட்டிருக்கும் விதம் முதலியவைகூட இச்சட்டப்படிக்கும் விதிகளின்படிக்கும் இல்லாவிட்டால்—அதுவும் 'கலப்படம்' செய்வதாகும் என்பது கவனிக்கத் தக்கது. 'கலப்படம்' என்பதற்கு இச்சட்டத்திலேயே சில உதாரணங்கள் கொடுக்கப்பட் டிருந்தால் உதவியாக இருக்கும். ஆனால் சட்டத்தில் உதாரணங்கள் இல்லை. இருந்தாலும் சில உதாரணங்களைக் கொண்டு 'கலப்படம்' என்பது என்ன என்று விளக்கலாம்:—

உதாரணம் (1): ஒரு எண்ணெய் வியாபாரியிடம் ஒருவர் ஒரு வீசை நல்லெண்ணெய் விலைக்குக் கேட்கிறார். சரியாக எடை அல்லது அளவு குறையாமல் அவ்வியாபாரி ஒரு வீசை நல்லெண்ணெய் கொடுக்கிறார். ஆனால் அவர் கொடுக்கும் எண்ணெயில் கடலை எண்ணெய் கலந்திருக்கிறது. இவ்வியாபாரியானவர் இச்சட்டப்படி 'கலப்படம்' செய்யப்பட்ட உணவுப் பண்டத்தை விற்ற குற்றம் செய்பவர் ஆவார். இவர் முதல் தடவை செய்யும் குற்றத்திற்கே இவருக்கு ஒரு வருடம் வரை சிறை தண்டனையும் ரூ. 1000 வரை அபராதமும் விதிக்கப் படலாம். நல்லெண்ணெயில் கடலை எண்ணெய் கல்ந்திருப்பதை எப்படிக் கண்டுபிடிக்கலாம் என்பதைப்பற்றி இச் சட்டத்தில் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. சர்க்கார் அதிகாரிகள் தவிர சரக்கு வாங்கும் பொது மக்களும் கலப்படத்தைக் கண்டுபிடிக்க இப்புதுச் சட்டத்தில் ஷரத்துக்கள் இருக்கின்றன என்பது கவனிக்கத் தக்கது.

உதாரணம் (2): ஒரு நெய் வியாபாரி 'நெய்' என்று சொல்லி வனஸ்பதியையோ, அல்லது வனஸ்பதி கலந்த நெய்யையோ விற்பனை செய்கிறார். இவர் 'கலப்படம்' செய்த உணவுப் பண்டத்தை விற்பதாக ஏற்படும். இது குற்றம். தண்டனை உண்டு.

உதாரணம் (3): ஒரு ஹோட்டல்காரர் அழுகிய காய்கறிகளை உபயோகித்து உணவுப் பண்டம் தயார்செய்கிறார். இவர் இச்சட்டப்படிக் 'கலப்படம்' செய்த உணவுப் பண்டத்தை விற்பதாக ஏற்படும். இது குற்றம். தண்டனை உண்டு.

உதாரணம் (4): ஒரு ஹோட்டல்காரர் கலும்பு வரக்கூடிய பாத்திரங்களில் உணவுப் பண்டங்களை வைத்திருக்கிறார். இவர் 'கலப்படம்' செய்த குற்றம் செய்தவராவார். தண்டனை உண்டு.

## "போலி உணவுப் பண்டங்கள்" (Misbranded Food) என்றால் என்ன?

இச் சட்டத்தின் செக்ஷன் 2 (ix) ஷரத்தில் 'போலி'ச் சரக்கு (Misbranded) என்பதற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. 'இமிடேஷன்' சரக்குகள் - அதாவது எந்தப் பெயர் அல்லது விலாசத்தில் ஒரு உணவுப் பண்டம் விற்பனை செய்யப்பட்டு வருகிறதோ அதுதான் என்று நினைத்து வாங்குபவர்கள் ஏமாந்து போகும்படி அதைப் போலவே உள்ள பெயரில் விற்கப்படும் சரக்குகள்; - ஒரு உணவுப்பண்டமானது இன்ன

இடத்தில் அல்லது இன்ன தேசத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதென்று பொய் விவரணம் கொடுக்கப்படும் பண்டங்கள்; பொய்யான வியாபாரப் பெயருடன் விற்கப்படும் உணவுப் பண்டங்கள்; கெட்டுப்போன உணவுப் பண்டங்களுக்குக் 'கலர்' ஏற்றியோ, வாசனை சேர்த்தோ, பொடி செய்யப்பட்டோ; 'பாலிஷ்' கொடுக்கப்பட்டோ விற்கப்படும் உணவுப் பண்டங்கள்; ஒரு உணவுப் பண்டத்தின் குணதிசயங்களைப்பற்றி பொய்யான விஷயங்கள் அடங்கிய 'லேபிள்' போட்டு விற்பனை செய்யப்படும் பண்டங்கள்; சீல் செய்யப்பட்ட 'டின்' அல்லது அட்டைப் பெட்டிக்குள் இருக்கும் உணவுப் பண்டங்கள் என்ன என்பதைப்பற்றி உண்மையாகவும் யாவருக்கும் தெரியும்படியும் வெளிப் பக்கத்தில் அறிவிக்கப்படாத உணவுப் பண்டங்கள்; உள்ளே இருக்கும் சரக்கைப் பற்றி பொய் விவரணம் அல்லது அடையாளத்துடன் கூடிய சரக்குகள்; இச் சட்ட ஷரத்துக்களுக்கும் விதிகளில் அடங்கிய ஷரத்துக்களுக்கும் முரணாக தயார் செய்யப்பட்டோ; கலர் சேர்க்கப்பட்டோ; லேபிள் ஒட்டப்பட்டோ இருக்கும் உணவுப் பண்டங்கள் இவை எல்லாம் இச் சட்டத்தில் 'போலி' உணவுப் பண்டங்கள் (Misbranded food) என்று சொல்லப்படுகிறது. (உணவுப் பண்டங்களைத் தயார் செய்து சீசாக்களிலோ, டின் அல்லது அட்டைப் பெட்டிகளிலோ அடைத்து உற்பத்தி செய்பவர்களும் விற்பனையாளர்களும், ஆங்கிலத்திலுள்ள இச் சட்ட ஷரத்துக்களையும் விதிகளையும் கூர்ந்து கவனித்துத் தொழில் நடத்துவது மிக அவசியமாகும்.)

## இறக்குமதி செய்யத் தடை (செக்ஷன் 5)

(1) கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களையும் (2) போலி உணவுப் பண்டங்களையும் - எவரும் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யக்கூடாது. (3) லைசென்சு வாங்கிக்கொண்டு இறக்குமதி செய்ய வேண்டிய உணவுப் பண்டங்களை லைசென்சில் கண்ட நிபந்தனைகளுக்கு முரணாகவும் (4) இச்சட்டத்திற்கோ விதிகளுக்கோ முரணாகவும் எவரும் எந்த உணவுப் பண்டங்களையும் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யக் கூடாது.

## கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களையும் போலி உணவுப் பண்டங்களையும் உற்பத்தி செய்வது, விற்பனை செய்வது முதலியவை கூடாது (செக்ஷன் 7.)

எவரும் தாமாகவோ தமக்காக வேறு நபர்களைக்கொண்டோ கீழே கண்ட உணவுப் பண்டங்களை விற்பனைக்காக உற்பத்தி செய்வதும், சேகரம் செய்து வைப்பதும், விற்பனை செய்வதும், விநியோகம் செய்வதும் கூடாது. அவையாவன:— (1) கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள் (adulterated food) (2) போலி உணவுப் பண்டங்கள் (Misbranded food) மேலும்— (3) எந்த உணவுப் பண்டங்களையாவது விற்பனை செய்ய இச்சட்ட விதிகளின்படி லைசென்சு வேண்டுமென்று இருந்தால் லைசென்சில் கண்ட நிபந்தனைகளுக்கு முரணாக அவ்வித உணவுப் பண்டங்களையும், (4) தொத்து நோய்கள் பரவாமலிருக்கும் பொருட்டுத் தாற்காலிகமாக உணவு சுகாதார அதிகாரியால் (Food (Health) Authority) விற்பனை செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கும் உணவுப் பண்டங்களையும் (5) இச் சட்டத்தின் மற்ற ஷரத்துக்களுக்கும் விதிகளுக்கும் முரணாகவும் எவரும் எந்த உணவுப் பண்டங்களையும் — எவரும் தாமாகவோ, தமக்காக வேறு ஒருவரைக்கொண்டோ விற்பனைக்காக உற்பத்தி செய்வதும், சேகரம் செய்வதும், விற்பனை செய்வதும், விநியோகம் செய்வதும் கூடாது.

## குற்றங்களாகும் [செக்ஷன் 16 (1) ]

(a) இச்சட்ட ஷரத்துக்களுக்கோ இச்சட்ட விதிகளுக்கோ முரணாக எவரும் தாமாகவோ, தமக்காக வேறு நபர்களைக் கொண்டோ எந்த உணவுப் பண்டங்களை இந்தியாவுக்குள் இறக்குமதி செய்தாலும், விற்பனைக்காக உற்பத்தி செய்தாலும், சேகரம் செய்துவைத்தாலும், விற்பனை செய்தாலும், விநியோகம் செய்தாலும்; (b) இச் சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தை அனுசரித்து மாதிரி (Sample) எடுக்க வொட்டாமல் உணவு இன்ஸ்பெக்டரை (Food Inspector) எவர் தடுத்தாலும்; (c) இச்சட்டத்தால் உணவு இன்ஸ்பெக்டருக்கு அளிக்கப்பட்டிருக்கும் வேறு அதிகாரங்களை செலுத்தவொட்டாமல் அவரை எவர் தடுத்தாலும; (d) ஒரு உணவுப் பண்டத்தை உற்பத்தி செய்யும் ஒருவர், தம்மிடமோ, அல்லது தம் வசமுள்ள எந்த இடத்திலோ, தாம் உற்பத்திசெய்யும் உணவுப் பண்டத்துடன் கலந்து கொடுக்கக்கூடிய எவ்வித சரக்கை வைத்திருந்தாலும்; (e) விற்பனையாளரிடம் உணவு இன்ஸ்பெக்டரால் பந்தோபஸ்துக்காக செக்ஷன் 10 (4) ஷரத்துப்படி ஒப்படைக்கப்பட்ட உணவுப்பண்டத்தை அவர் மாற்றி வைத்தாலும்; (f) மத்திய உணவு ரசாயனசாலை டைரெக்டராலோ (Director of the Central Food Laboratory) அல்லது

பொது ஆராய்ச்சியாளராலோ (Public Analyst) அளிக்கப்பட்ட யாதாஸ்து அல்லது நற்சாட்சிப்பத்திரத்தை ஒருவர் தம்முடைய உணவுப் பண்டங்களை விளம்பரப்படுத்துவதற்காக உபயோகித்தாலும்; (g) ஒருவர் தாம் விற்பனை செய்யும் உணவுப் பண்டத்தைப்பற்றித் தாமோ வேறு நபர் மூலமோ எழுத்து மூலம் பொய் உத்தரவாதம் கொடுத்தாலும் — இவை எல்லாம் இச்சட்டப்படி குற்றமாகும்.

### தண்டனை

மேலே கண்ட குற்றங்களை முதல் தடவையாகச் செய்பவர்களுக்கு ஒரு வருடம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 2000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்

### இரண்டாவது தடவை குற்றம் செய்தால் கடுமையான தண்டனை

மேலே கண்ட குற்றங்களை ஒருவர் இரண்டாவது தடவையாகச் செய்தால் அவருக்கு இரண்டு வருடங்கள் வரை சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்; மேலும் இரண்டாவது தடவைக் குற்றம் செய்பவர்களுக்கு ஒரு வருடத்திற்குக் குறையாமல் சிறை தண்டனையும் ரூ. 2000 க்குக் குறையாமல் அபராதமும் விதிக்கப்படும். போதுமான விசேஷ காரணங்கள் இருந்தாலொழிய மேற்கண்ட தண்டனைக் குறையாது. அதற்குக் குறைவான தண்டனை அளிப்பதாக இருந்தால் அக்காரணங்களை நீதிபதி தம்முடைய தீர்ப்பில் குறிப்பிடவேண்டும்.

### மூன்றாவது தடவை குற்றத்திற்கு இரண்டுவருட சிறை தண்டனைக்கும் ரூ. 3000 அபராதத்திற்கும் குறையாது

மேற்கண்ட குற்றங்களை ஒருவர் மூன்றாவது தடவையாகவோ, அதற்கும் மறுபடியாகவோ செய்தால் அவருக்கு நான்கு வருடங்கள் வரை சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம். போதுமான விசேஷ காரணங்கள் இருந்தாலொழிய இவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை இரண்டு வருட சிறை வாசத்திற்கும் ரூ. 3000 அபராதத்திற்கும் குறையாது. அதற்குக் குறைவாக தண்டனை அளிக்கப்பட்டால் அதற்கான காரணங்களைக் கோர்ட்டார் தீர்ப்பில் குறிப்பிடவேண்டும்.

### குற்றம் செய்பவருடைய பெயரும் விலாசமும் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்படும் [செக்ஷன் 16 (2)]

இச்சட்டப்படி முதல் தடவை தண்டனை அடைந்த ஒருவர் மறுபடியும் குற்றம் செய்து தண்டனை அடையும்போது அவருடைய பெயர், விலாசம், அவர் செய்த குற்றம், அவர் அடைந்த தண்டனை இவ்விஷயங்களை கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோன்றும் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யும்படி உத்தரவிட கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. இப்பிரசுரச் செலவுகளும் அபராதத்தைப்போலவே குற்றம் செய்தவரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

### சரக்கும் பறிமுதல் செய்யப்படும்

இச் சட்டப்படி ஒருவருக்கு தண்டனை அளிக்கப்படும்போது, அவர் எந்த உணவுப் பண்ட சம்பந்தமாகக் குற்றம் செய்தாரோ அவை சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும்.

### கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களையும் போலி உணவுப் பண்டங்களையும் யார் எப்படிக் கண்டு பிடிப்பார்கள்? உணவு இன்ஸ்பெக்டரின் அதிகாரங்கள்.

இச்சட்டப்படி அந்தந்த இடங்களுக்கு அதிகாரமுள்ள உணவு இன்ஸ்பெக்டர்கள் (Food Inspectors) நியமிக்கப்படுவார்கள். உணவு இன்ஸ்பெக்டர்களுக்குப் பலவித அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கடைக்காரர்களிடமிருந்து இவர்கள் உணவுப் பண்டத்தின் மாதிரி (சாம்பிள் — Sample) எடுத்துக் கொள்ளலாம்; உணவுப் பண்டங்களை வாங்குபவருக்கு அனுப்பப்படும்போதும் சரி; உணவுப் பண்டம் வாங்கியவரிடமிருந்தும் சரி 'சாம்பிள்' எடுக்க உணவு இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. உணவு இன்ஸ்பெக்டர் எடுத்த மாதிரி அல்லது 'சாம்பிளை' அவர் இச்சட்டப்படி நியமிக்கப்படும் பொதுப் பரிசோதகர் (Public Analyst) என்ற அதிகாரிக்கு அனுப்புவார். மேல் அதிகாரிகளின் முன் அனுமதி பெற்று தொற்று நோய்களைத் தடுக்கும்பொருட்டு எந்தெந்த உணவுப் பண்டங்களை விற்பனை செய்யக்கூடாதென்று தடுக்கவும் உணவு இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் உண்டு. உணவுப் பண்டங்கள் உற்பத்தி அல்லது தயார் செய்யப்படும் இடங்களையும் சேகரம் செய்யப்பட்டிருக்கும் இடங்களையும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் இடங்களையும் உள்ளே நுழைந்து சோதனை செய்யவும் சாம்பிள் எடுத்துக்கொள்ளவும் உணவு இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் இருக்கிறது. 'சாம்பிள்' அல்லது மாதிரி எடுக்கப்படும்போது அந்த உணவுப் பண்டத்தின் கிரயத்தை உணவு இன்ஸ்பெக்டர் கொடுத்துவிடவேண்டும். அதாவது யாரிடமிருந்து 'சாம்பிள்' எடுக்கப்படுகிறதோ அவ

187242

ரிடம், அப்பண்டம் சாதாரணமாகப் பொது மக்களுக்கு என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அந்த விலை கொடுக்கப்படும். உணவு இன்ஸ்பெக்டருக்கே ஒரு உணவுப்பண்டமானது கலப்படம் செய்யப்பட்டதென்றோ, போலிச் சரக்கென்றோ தோன்றினால் அச்சரக்கு எல்லாவற்றையும் அவர் கைப்பற்றி எடுத்துக்கொண்டும் போகலாம். அல்லது அவற்றை வியாபாரியிடமே பந்தோபஸ்துக்காகக் கொடுத்தும் வைக்கலாம். (இச்சரக்கை என்ன செய்ய வேண்டுமென்று வேறு ஷரத்துக்கள் இருக்கின்றன.) உணவுப் பண்டம் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் பூட்டப்பட்டிருந்தால் கதவைத் திறக்கச் சொந்தக்காரர் மறுக்கும் பட்சத்தில், கதவை உடைத்துச் சோதனை செய்யவும்; உணவுப் பண்டங்கள் அடங்கிய டின் அல்லது பாக்கெட்டுக்களை உடைக்கவும் உணவு இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் உண்டு. உணவுப் பண்டம் உற்பத்தி செய்பவரிடம், அவர் உற்பத்தி செய்யும் பண்டத்துடன் கலப்படம் செய்யக்கூடிய வேறு சரக்கு காரணமில்லாமல் வைக்கப்பட்டிருந்தால் அவற்றையும் கைப்பற்ற உணவு இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. உணவு இன்ஸ்பெக்டர் 'சாம்பிள்' அல்லது மாதிரி எடுக்கும்போதும், சரக்குகளைக் கைப்பற்றும்போதும் கூடுமான வரையில் குறைந்தது இரண்டு சாட்சிகளை வைத்துக்கொண்டு அப்படிச் செய்யவேண்டும். உணவு இன்ஸ்பெக்டருக்குக் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் செக்ஷன் 57-ல் கண்ட அதிகாரமும் உண்டு. அதாவது இச்சட்டப்படி குற்றம் செய்த ஒருவருடைய பெயரையும் விலாசத்தையும் அவர் கேட்டு கேட்கப்படுபவர் அதைச் சொல்ல மறுத்தாலும், அல்லது அவர் சொல்லுவது உண்மை அல்ல என்ற சந்தேகம் தோன்றினாலும் அவரை 'அரெஸ்டு' செய்ய உணவு இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் உண்டு.

## உணவு இன்ஸ்பெக்டரும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

இச்சட்டப்படிக்கும் விதிகளின் படிக்கும் உணவு இன்ஸ்பெக்டருக்குள்ள அதிகாரங்களை அவர் செலுத்தும்போது — நியாயமான காரணங்கள் இல்லாமலும் தொல்லை கொடுக்கும் நோக்கத்துடனும் அவர் எந்த உணவுப் பண்டங்களைக் கைப்பற்றினாலும் சரி; தம்முடைய கடமையைச் செய்ய அவசியமானதென்று நினைக்கப் போதுமான காரணமில்லாமலே அவர் எவருக்கும் கெடுதி விளைவிக்கக் கூடிய செய்கையைச் செய்தாலும் சரி; அந்த உணவு இன்ஸ்பெக்டர் ஒரு குற்றம் செய்பவராவார். ரூ. 500 வரை அவருக்கு அபராத தண்டனை விதிக்கப்படலாம்.

## 'சாம்பிள்' எடுக்கும்போது.

உணவு இன்ஸ்பெக்டர் இச்சட்டப்படி ஒரு உணவுப் பண்டத்தின் மாதிரி அல்லது 'சாம்பிள்' எடுத்துக்கொள்ளும்போது - அதைப் பொதுப் பரிசோதகருக்கு அனுப்பிப் பரீட்சை செய்யப் போவதாக எழுத்துமூலம் சாம்பிள் யாரிடமிருந்து எடுக்கப்பட்டதோ அவருக்கு அறிவித்துவிட வேண்டும். மாதிரி எடுத்ததை மூன்று பாகங்களாகச் செய்து விதிகளின்படி அடையாளக் குறிப்பிட்டு 'சீல்' வைக்கவேண்டும். 'சாம்பிள்' யாரிடமிருந்து எடுக்கப்பட்டதோ அவரிடம் ஒரு பாகத்தைக் கொடுத்துவிடவேண்டும். பொதுப் பரிசோதகருக்கு ஒரு பாகத்தை அனுப்பவேண்டும். மற்றொரு பாகத்தைப் பிந்தி கோர்ட் நடவடிக்கைகளில் தாக்கல் செய்யவோ உணவு டைரெக்டர் பரிசோதனை செய்யவோ வைத்திருக்கவேண்டும். யாரிடமிருந்து 'சாம்பிள்' எடுக்கப்பட்டதோ அவர் சாம்பிளின் ஒரு பாகத்தை வாங்கிக் கொள்ள மறுத்தால் இது விஷயத்தை உணவு இன்ஸ்பெக்டரானவர் பொது பரிசோதகருக்குத் தெரிவிக்கவேண்டும். அவர் தமக்கு அனுப்பப்படும் பாகத்தை இரண்டாகச் செய்து ஒரு பாகத்தைத் தம்மிடமே வைத்திருந்து தம்முடைய பரிசோதனை யாதாஸ்து அனுப்பும்போது அதையும் சேர்த்து அனுப்புவார்.

## பொது மக்களும் 'கலப்படத்தை'க் கண்டு பிடிக்கலாம்.

உணவுப் பண்டத்தை விலைக்கு வாங்கும் எவரும், உணவு இன்ஸ்பெக்டர் செய்வது போலவே தாம் வாங்கிய பண்டத்தைப் பொதுப் பரிசோதகருக்கு அனுப்பி அப்பண்டத்தில் கலப்படம் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ளலாம். ஆனால் இதற்காக விதிக்கப்பட்டுள்ள கட்டணம் கட்ட வேண்டும். தாம் அனுப்பிய உணவுப் பணடத்தில் கலப்படம் இருந்தால், அவர் கட்டிய கட்டணம் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். இவ்விதம் பரிசோதனை செய்யும் நோக்கத்துடன் உணவுப் பண்டத்தை விலைக்கு வாங்கும் பொது மக்கள் இச்சட்டத்தின் செக்ஷன் 11 (1) (2) (3) ஷரத்துக்களின்படி உணவு இன்ஸ்பெக்டர் எவ்விதம் செய்யவேண்டுமோ அதே முறைப்படி செய்யவேண்டும்.

## பரிசோதனை.

இச்சட்டப்படி தமக்கு அனுப்பப்படும் உணவுப் பண்ட மாதிரியை விஞ்ஞான ரீதிப்படி பரிசோதனை செய்யும் பொது பரிசோதகர் (Public Analyst) என்ற அதிகாரியானவர்

தம்முடைய 'ரிபோர்ட்'டை உணவு இன்ஸ்பெக்டருக்கு அனுப்புவார். கோர்ட்டில் நடவடிக்கை நடக்கும்போது பண்டங்களை விற்பனை செய்த எதிரியோ, அல்லது அவர்மீது குற்றம் சாட்டுபவரோ, அபிப்பிராயப்பட்டால், மாதிரி எடுக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பண்டத்தின் மற்றொரு பாகத்தை மத்திய உணவு ரசாயன சாலை டைரெக்டர் (Director of thc Central Food Laboratory) என்ற மேல் அதிகாரிக்கு அனுப்பிப் பரிசோதனை செய்யப்பட வேண்டுமென்று கோர்ட்டில் கேட்கலாம். இதற்குக் கட்டணம் உண்டு. கோர்ட்டார் மாதிரியை அந்த அதிகாரிக்கு அனுப்பி அவ்வதிகாரியிடமிருந்து ஒரு 'சர்டிபிகேட்' வரும். இந்த 'சர்டிபிகேட்'டால் ஏற்கனவே பொதுப் பரிசோதகரால் கொடுக்கப்பட்ட ரிபோர்ட்டானது ரத்து செய்யப்பட்டதாகும்.

## உணவு மத்தியக் கமிட்டி

இச்சட்டத்தை அமுல் நடத்துவதுபற்றி மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்கார்களுக்கும் ஆலோசனைகள் சொல்ல மத்திய சர்க்காரால் உணவு மத்திய கமிட்டி (The Central Committee for food Standards) என்று ஒரு பிரதிநிதித்துவம் வாய்ந்த கமிட்டி நியமிக்கப்படும்.

## விதிகள்-

இச்சட்டப்படி சில விஷயங்கள் சம்பந்தமாக விதிகள் இயற்ற மத்திய சர்க்காருக்கும் மற்ற விஷயங்களைப்பற்றி விதிகள் இயற்ற அந்தந்த ராஜ்ய சர்க்கார்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## மத்திய சர்க்கார் விதிகள்

இச்சட்டத்தால் அளிக்கப் பட்டிருக்கும் அதிகாரங்களை உபயோகித்து 12-9-1955-ல் மத்திய சர்க்கார் விதிகள் இயற்றி இருக்கின்றனர். இவ்விதிகள் 9-11-1955 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I Aஐல் சப்ளிமெண்ட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளின் பாகம் 1 என்பது முகவுரை; பாகம் 2 என்பது மத்திய உணவு பரிசோதனைச் சாலையின் அமைப்பைப் பற்றியது; பாகம் 3 என்பது சில உணவுப் பண்டங்கள் எவ்வித ரகத்துடன் இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்கிறது. அநுபந்தம் B-என்பதில் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (1) சோடா கலர் பானங்கள் (2) பேக்கிங் பவுடர் (3) ஆரோரூட், மரவள்ளி, ஜவ்வரிசி, (4) பெருங்காயம், மஞ்சள் (5) லவங்கப் பொடி, கிராம்பு, மல்லி (6) பருப்புவகை (7) ஜீனி, புரா, தேன், ஐஸ்காண்டி (8) காபி, சிக்கரி, காபி சிக்கரிக் கலப்பு (9) கரிப் பொடி (10) புலால் (11) பால், பால் சரக்குகள், தையிர், வெண்ணெய் (12) மார்கரைன் (13) குங்குமப்பூ (14) தேயிலை (15) உப்பு - இச் சரக்குகள் எவ்விதம் இருக்க வேண்டுமென்று விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மாறாக இருந்தால் அது கலப்படமாகக் கருதப்படும்.

விதிகளின் பாகம் 4 என்பது பொது பரிசோதகர், உணவு இன்ஸ்பெக்டர் இவர்களைப் பற்றியது. பாகம் 5 என்பது 'சாம்பிள்' அல்லது மாதிரி எடுப்பதையும் அதை சீல் செய்து அனுப்புவதையும் பற்றியது. பாகம் 6 என்பது சில உணவுப் பண்டங்களுக்கு கலர் கொடுப்பது எப்படி இருக்கவேண்டு மென்பது பற்றி. கலர் கொடுக்க எந்த எந்தச் சரக்குகள் தான் எவ்வளவு அளவுக்கு உபயோகப் படுத்தலாம் என்ற நுட்பங்களும் இருக்கிறது. பாகம் 7 என்பது உணவுப் பண்டங்களை 'பாக்' செய்து 'லேபிள்' ஒட்டுவதுபற்றி. பாகம் 8 என்பது சில பண்டங்களின் விற்பனையைத் தடுப்பதும் ஒழுங்கு படுத்துவதும் பற்றியது.

## விற்பனை செய்யத் தடை

பாகம் 8 - விதி 44 ன்படி எவரும் தாமாகவோ, வேறு ஒருவரைக் கொண்டோ அடியில் கண்ட பண்டங்களை விற்பனை செய்யக் கூடாதென்று தடை செய்யப்பட்டிருக்கிறது. அவையாவன:- (1) பாலில் செய்யப்படாததும், பாலில் செய்யப்பட்டிருந்தாலும் குறைந்தது 40 சதவிகிதமாவது பால்சத்து இல்லாததுமான ஐஸ்கிரீம். (2) நீர் கலந்த பால் (3) வேறு பண்டங்கள் கலந்த நெய் (4) ஆடை அல்லது பால் சத்து எடுக்கப்பட்ட பால் (5) இரண்டு அல்லது அதிகமான வகை எண்ணெய் கலந்த எண்ணெய் (6) நெய் கலந்த வனஸ்பதி (7) ரசாயனச் சக்கரை கலந்த உணவுப் பண்டங்கள் (8) வேறு பண்டங்கள் கலந்த மஞ்சள். சுத்தத் தேன் அல்லாத சரக்கைத் தேன் என்று சொல்லி எவரும் விற்கக் கூடாது. எவரும் விற்பதற்காகவோ அல்லது விற்க வேண்டிய சரக்குகளைச் செய்வதற்காகவோ நெய் அல்லது வெண்ணெயுடன் வேறு சரக்கைக் கலந்து வைத்துக் கொள்ளவும் கூடாது.

## லைசென்சு வேண்டும் (விதி 50)

அடியில் கண்ட உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும், சேகரம் செய்யவும், விநியோகம் செய்யவும், லைசென்சு

வாங்கிக் கொள்ள வேண்டும். அவையாவன:- (1) பால் (2) பால் சரக்குகள் (3) நெய் (4) வெண்ணெய் (5) சார்பி (6) சாப்பிடும் எண்ணெய் (7) செலவு நெய் (Waste ghee) (8) காரம் அல்லது தித்திப்புள்ள தின்பண்டங்கள் (9) சோடாகலர் (10) பிஸ்கட் முதலிய மாவில் செய்யப்படும் பண்டங்கள் (11) ராஜ்ய சர்க்காரால் குறிப்பிடப்படும் மற்ற பண்டங்கள்.

### ஹோட்டல்காரர்கள் கவனிக்கவும்

விதி 50 (7)-ன்படி ஹோட்டல்காரர்கள் விற்பனைக்காக வைத்திருக்கும் காரம் அல்லது தித்திப்புத் தின்பண்டங்களைப் பற்றி எந்த எந்தப் பண்டங்கள் நெய்யில் செய்யப்பட்டவை; எவை எண்ணெயில் செய்யப்பட்டவை; எவை வனஸ்பதியில் செய்யப்பட்டவை என்பதை சரக்கு வாங்குபவர்களுக்குத் தெரியும்படியாக நோட்டீஸ் போர்டில் தனித்தனி ஜாப்தா கொடுக்க வேண்டும்.

# தீண்டாமைக் குற்றச்சட்டம்

[The Untouchability (Offences) Act 1955 — 1955-ம் வருடத்திய 22-வது மத்தியச் சட்டம். இச்சட்டத்திற்கு 8-5-1955ல் ஜனாதிபதி அவர்கள் அங்கீகாரம் அளித்து 8-6-1955 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்டில் இது பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. கீழே இருப்பது இச்சட்டத்தின் பெரும்படியான ஒரு விளக்கமே ஒழிய மொழி பெயர்ப்பு அல்ல.]

### முகவுரை

நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 17 என்ற ஷரத்தில் இருப்பது இதுதான். "தீண்டாமை (Untouchability) ஒழிக்கப்படுகிறது. அதை ஆதாரமாகக் கொண்டு நடக்கும் பழக்க வழக்கங்களும் தடுக்கப்படுகிறது. தீண்டாமையிலிருந்து விளையும் யோக்கியதைக் குறைவை நடைமுறையில் அனுஷ்டிப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்" — என்று இருக்கிறது. இந்த ஷரத்தை அனுசரித்து, தீண்டாமை காரணமாக ஒருவர் செய்யும் எந்த எந்தக் காரியங்கள் குற்றமாகும் என்றும் அக் குற்றங்களுக்கு என்ன தண்டனை என்றும் குறிப்பிட்டு நமது பார்லிமெண்ட் இப்போது இச்சட்டம் இயற்றி இருக்கின்றது.

### தீண்டாமை

"தீண்டாமை" (Untouchability) என்ற சொல்லுக்கு விரிவாக அரசியல் அமைப்புச் சட்டத்திலோ, இச் சட்டத்திலோ யாதொரு விளக்கமும் சொல்லப்படவில்லை. ஆனால் இச் சட்டத்தால் குற்றமாக்கப்பட்ட ஒரு செய்கையை "ஷிடியூல் ஜாதி"யைச் சேர்ந்த ஒரு நபர் சம்பந்தமாக ஒருவர் செய்தால் அவர் "தீண்டாமை" காரணமாக அவ்விதம் செய்வதாக கோர்ட்டார் பாவிக்கலாம். குற்றம் சாட்டப்பட்டவர் "தீண்டாமை" காரணமாகத் தாம் அவ்விதம் செய்யவில்லை என்று ருசுப்பித்துத் தப்பிக்கொள்ளலாம். "ஷிடியூல் ஜாதி"யினர் என்பது நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 341, ஆர்டிகிள் 366 ன்படி ஜனாதிபதி அவர்களால் குறிப்பிடப்பட்டிருக்கும் ஜாதியினரைக் குறிக்கும்.

### குற்றமாகும்

அதே மதம் அல்லது மதப் பிரிவினையைச் சேர்ந்த மற்றவர்கள் போகக் கூடிய ஒரு பொதுக் கோயில் அல்லது பொது வழிபாடு செய்யுமிடத்தில், தீண்டாமை காரணமாக ஒருவர் நுழையக்கூடாதென்று தடுப்பது இச் சட்டப்படி குற்றமாகும். அப்படித் தடுத்தவருக்கு 6 மாதம் வரை சிறைதண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

அதே மதம் அல்லது மதப் பிரிவினையைச் சேர்ந்தவர்களைப் போல ஒருவரைத் தீண்டாமை காரணமாக அவர் எந்தப் பொதுக் கோயில் முதலிய இடங்களில் வழிபாடு செய்யக்கூடாதென்றோ, அல்லது புண்ய தீர்த்

தங்களாகிய குளம், கிணறு, ஊற்று அல்லது ஆறுகளில் அவர் குளிக்கக்கூடாதென்றோ, அவர் அந்த ஜலத்தை உபயோகிக்கக்கூடாதென்றோ தடுப்பதும் குற்றமாகும். அதே தண்டனை விதிக்கப்படலாம். (செக்ஷன் 3.)

### கடை, ஹோட்டல், சத்திரம் முதலிய இடங்களில் 'தீண்டாமை' காரணமாக ஒருவரைத் தடுப்பதும் குற்றமாகும்.

தீண்டாமை காரணமாக ஒருவர் ஒரு கடைக்கு வரக்கூடாதென்றோ, பொது உணவு விடுதி, ஹோட்டல் அல்லது கேளிக்கைகள் நடக்குமிடங்களில் வரக்கூடாதென்றோ தடுப்பது குற்றமாகும். பொது ஹோட்டல்கள், உணவு விடுதிகள் தர்மசாலைகள் இவைகள் அதே மதத்தைச் சேர்ந்த பொதுமக்கள் உபயோகிக்கக்கூடிய பாத்திரங்கள் முதலிய தளவாட சாமான்களை தீண்டாமை காரணமாக ஒருவர் உபயோகிக்கக்கூடாதென்று செய்வதும் குற்றமாகும். ஒருவர் எந்தத் தொழிலையோ, அல்லது வியாபாரத்தையோ தீண்டாமை காரணமாகச் செய்யக்கூடாதென்று வற்புறுத்துவதும் குற்றம். பொதுமக்களோ, அதே மதத்தையோ, மதப் பிரிவினையையோ சேர்ந்த மற்றமக்களோ உபயோகப்படுத்தக் கூடிய ஆறுகள், ஊற்றுகள், கிணறுகள், குழாய்கள், படித்துறைகள், மயானங்கள், கக்கூசுகள், ரஸ்தாக்கள், பொதுமக்கள் கூடக்கூடிய வேறு இடங்கள் இவைகளை ஒருவர் தீண்டாமை காரணமாக உபயோகிக்கக் கூடாதென்று செய்வதும் குற்றமாகும். அதைப் போலவே பொது மக்கள் உபயோகிக்கும் சத்திரங்கள், தர்மங்கள், பஸ் வண்டி முதலிய வாகனங்கள், இவைகளை தீண்டாமை காரணமாக ஒருவர் உபயோகிக்கக்கூடாதென்பதும் குற்றமாகும். எந்த இடத்திலும் வீடுகட்டி வசிக்கும் பாத்தியத்தைத் தீண்டாமை காரணமாக ஒருவருக்கு மறுப்பது குற்றமாகும். தீண்டாமை காரணமாக ஒருவர் சில பழக்கவழக்கங்களைக் கொண்டாடக்கூடாதென்று மறுப்பதும் நகை முதலியவைகளை அணியக்கூடாதென்று தடுப்பதும் குற்றமாகும். இக் குற்றங்களுக்கும் முன் சொன்னது போலவே தண்டனை உண்டு. (செக்ஷன் 4.)

### ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடங்கள், ஹாஸ்டல் முதலியவை

பொதுமக்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் ஆஸ்பத்திரியிலோ, கல்வி ஸ்தாபனத்திலோ, ஹாஸ்டலிலோ தீண்டாமை காரணமாக ஒருவருக்கு இடமில்லை என்று மறுப்பது ஒரு குற்றமாகும். இந்த ஸ்தாபனங்களில் சேர்ந்த பிறகு தீண்டாமை காரணமாக ஒருவரை வித்தியாசமாகப் பாராட்டுவதும் குற்றமாகும். இக்குற்றங்களுக்கும் முன் சொல்லப்பட்ட தண்டனை உண்டு. (செக்ஷன் 5) மற்றவர்களுக்குள்ள நிபந்தனைகளின்படி தீண்டாமை காரணமாக ஒருவருக்குச் சரக்கு விற்பனை செய்ய மறுப்பதோ, சேவை செய்ய மறுப்பதோ குற்றமாகும். அதே தண்டனை உண்டு. (செக்ஷன் 6)

தீண்டாமை அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஒழிக்கப்பட்டு விட்டதனால் ஒருவருக்கு ஏற்படும் பாத்தியங்களை அனுபவிக்கவொட்டாமல் தடுப்பதும், அப்படி அனுபவிப்பவர்களைத் துன்புறுத்துவதும் பகிஷ்கரிப்பதும், தீண்டாமையை அனுஷ்டிக்கும்படிப் பொதுமக்களை வார்த்தைகளாலோ, எழுத்து மூலமோ வேறு விதமாகவோ தூண்டுவதும், தீண்டாமை கொண்டாடுபவர்களை ஜாதிக் கட்டுப்பாடு செய்வதும் இது போன்ற செய்கைகள் பல இச் சட்டத்தால் குற்றங்களாக்கப் பட்டிருக்கின்றன என்று பொதுவாகச் சொல்லலாம். (செக்ஷன் 7)

### தீண்டாமை அனுஷ்டிப்பவர்களுக்கு லைசென்சும் போய்விடும்.

கடைக்காரர்கள் தீண்டாமை காரணமாக ஒருவருக்குச் சரக்குகள் விற்க மறுத்தோ, அல்லது வேறு தொழில் செய்பவர்கள் தீண்டாமை காரணமாக ஒருவருக்குச் சேவை செய்ய மறுத்தோ குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அடையும்போது, அத்தொழில் அல்லது வியாபாரத்திற்காக ஏதாவது லைசென்சு இருந்தால் அதையும் குறிப்பிட்ட காலத்திற்கு ரத்து செய்யக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

### மறுமுறை குற்றம் செய்பவர்களுக்குக் கட்டாயம் சிறை தண்டனை அபராதம் இரண்டும் உண்டு.

இச்சட்டப்படி ஒருவர் குற்றம் செய்து தண்டனை அடைந்த பிறகு மறுபடியும் அவர் இச்சட்டத்தை மீறி குற்றம் செய்தால் அவருக்குச் சிறைதண்டனை அபராதம் இரண்டும் கட்டாயமாக விதிக்கப்படும். (செக்ஷன் 11)

# சென்னை நீர்ப்பாசன நில அபிவிருத்திக் கட்டண விதிப்புச் சட்டம் (1955)

முகவுரை

இது சென்னைச் சட்ட சபையால் இயற்றப்பட்ட 1955-ம் வருடத்திய 3-வது சென்னைச் சட்டம். (Madras Irrigation Levy of Betterment Contribution) Act 1955.) இச்சட்டம் 4—3—1955-ல் சென்னைக் கவர்னர் அவர்களுடைய அங்கீகாரம் பெற்று 6—3—1955 தேதி சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டு அத்தேதி முதல் அமுலுக்கு வந்துவிட்டது. இச்சட்டம் சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கும்.

## சில நிலங்களுக்குச் சர்க்காரால் அபிவிருத்திக் கட்டணம் விதிக்கப்படும்.

சென்னைச் சர்க்கார்ச் செலவில் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளோ அல்லது வடிகால் வசதிகளோ ஏற்படுத்தப்பட்டு அதனால் அனுகூலமடைந்து விலை உயரும் நிலங்களின் மீது 'அபிவிருத்திக் கட்டணம்' என்ற ஒரு புதிய கட்டணத்தை விதிக்க இச்சட்டம் சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கின்றது. இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகோ, அல்லது அதற்கு முன்பு இருந்தாலும் 1—1—1947 தேதியிலோ அதற்குப் பிறகோ ரூ. 25,000க்கு மேற்பட்ட செலவில் சென்னை ராஜ்ய சர்க்காரால் ஒரு நீர்ப்பாசனக் கட்டட வேலையோ அல்லது வடிகால்க் கட்டட வேலையோ புதிதாகக் கட்டப்பட்டு, (பம்புசெட் வைப்பதும் இதில் சேர்ந்ததே) அல்லது ஏற்கனவே இருந்தது விஸ்தரிக்கப்பட்டு அல்லது மாற்றி அமைக்கப்பட்டு அதனால் எந்த நிலமாவது நன்மை அடைகிறதென்று சர்க்காருக்குத் தோன்றும்பட்சத்தில், இச்சட்டப்படி அந்நிலத்தின் சொந்தக்காரர் மீது இச்சட்ட ஷரத்துக்களின்படி ஒரு அபிவிருத்திக் கட்டணம் விதிக்க சர்க்காருக்கு அதிகாரமுண்டு. (செக்ஷன் 3)

ஏற்கனவே இருந்துவருகிற நீர்ப்பாசன அல்லது வடிகால் கட்டட வேலைகளை முற்றிலுமோ, ஒரு பாகத்தை மட்டுமோ, சர்க்கார் செலவில் பராமரித்து வந்தால் அதனால் நிலங்கள் நன்மை அடைந்ததாக ஏற்படாது. (அதாவது இச்சட்டப்படி அபிவிருத்திக் கட்டணம் விதிக்க வேண்டுமானால், மேற்கண்டபடி 1—1—1947க்குப் பிறகு ரூ. 25,000க்கு மேல் செலவு செய்து சர்க்காரால் புதிதாக நீர்ப்பாசன கட்டடங்களோ வடிகால் கட்டடங்களோ கட்டப்பட்டிருக்க வேண்டும்; அல்லது பழைய கட்டடங்களாக இருந்தால் அவை மேற்கண்ட விதம் விஸ்தரிக்கப் பட்டோ மாற்றி அமைக்கப்பட்டோ இருக்கவேண்டும். ஏற்கனவே உள்ள வசதிகளைப் பராமரிப்பது மட்டில் போதாது.) ஆனால் மேற்கண்டபடி சர்க்காரால் கட்டட வேலைகள் செய்யப்பட்டும், ஒரு நிலத்தின் சொந்தக்காரர் அதன் நன்மையைத் தம்முடைய செய்கையாலோ அசட்டையாலோ, அடையாமலும் அனுபவிக்காமலும் இருந்துவிட்டாலும்கூட அவருடைய நிலம் நன்மை அடைந்ததாகவே பாவிக்கப்படும்; அவருக்கும் அபிவிருத்திக் கட்டணம் விதிக்க சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

## 'பாசனக் கட்டட வேலை' 'வடிகால் கட்டட வேலை' என்றால் என்ன ?

"பாசனக் கட்டட வேலை" என்பதில் எல்லா ஆறுகளும், இயற்கை நீரோடைகளும், சர்க்கார் நிலங்களிலிருக்கும் ஏரிகளும் இயற்கையான நீர்த் தேக்கங்களும் சேர்ந்தவையே. மேலும், தண்ணீர் சப்ளை செய்யவோ தேக்கி வைக்கவோ உபயோகிக்கப்படுகிற சகல கால்வாய்களும், வாய்க்கால்களும், குளங்களும், கிணறுகளும், நீர்த் தேக்கங்களும், குட்டைகளும் ஊற்றுக் குட்டைகளும் மற்றும் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட எல்லாக் கட்டட வேலைகளும் கரைகளும் இதில் அடங்கியவையே. ஆனால் இவை சர்க்காருக்குச் சொந்தமானவையாகவோ, சர்க்காரின் ஆதிக்கத்தில் உள்ளவையாகவோ அல்லது சர்க்காரால் பராமரிக்கப்படுபவையாகவோ இருக்க வேண்டும். அல்லது இவை சர்க்காரால் கட்டப்பட்டு, (நில ஒப்படைப்பினாலாவது நிலவரி ஒப்படைப்பினாலாவது வேறு ஒருவரால் பராமரிக்கப்பட்டு வந்தாலும்) இவற்றிலுள்ள சர்க்காரின் பாத்தியம் வேறு ஒருவருக்கும் மாற்றப்படாமலிருக்க வேண்டும்.

"வடிகால் கட்டட வேலை" என்பதில் கழிவுத் தண்ணீரை அல்லது அதிகமாயுள்ள தண்ணீரை வெளிப்படுத்துவதற்காக இயற்கையாகவோ, செயற்கையாகவோ ஏற்பட்டுள்ள வாய்க்கால்களும், அவற்றைச் சேர்ந்த

கட்டட வேலைகளும்; ஒரு பாசனக் கட்டட வேலையிலிருந்து தண்ணீர் வழிந்து போவதற்கான வாய்க்கால்களும்; அணைகள், மடைகள், கரைகள், மதகுகள், தடுப்புகள் இவைகளும் சேர்ந்தவையே. மேலும் வெள்ளத்தினின்றும், கரைந்து போவதிலிருந்தும் நிலங்களைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்ட எல்லாக் கட்டடவேலைகளும் இதில் அடங்கியவையே. ஆனால் இவை சர்க்காருக்குச் சொந்தமாகவோ அல்லது சர்க்கார் ஆதிக்கத்திலோ இருக்க வேண்டும். அல்லது இவை சர்க்காரால் கட்டப்பட்டு நில ஒப்படைப்பினாலாவது நில வரி ஒப்படைப்பினாலாவது வேறு ஒருவரால் பராமரிக்கப்பட்டு வந்தாலும் இவற்றிலுள்ள சர்க்காரின் பாத்தியம் வேறு ஒருவருக்கும் மாற்றப்படாமலிருக்க வேண்டும். ஆனால் சாக்கடைத் தண்ணீரை வெளிப் படுத்துவதற்கான கட்டட வேலைகள் வடிகால் கட்டட வேலைகளாகமாட்டா.

## அபிவிருத்திக் கட்டணத் தொகை எப்படி நிர்ணயம் செய்யப்படும்

மேலே கண்டபடி சர்க்காரின் நீர்ப்பாசன வேலைகளினாலோ வடிகால் வேலைகளினாலோ அல்லது அவைகளின் விஸ்தரிப்பினாலோ, மாற்றி அமைப்பினாலோ நன்மை அடைந்த நிலங்களை, சர்க்காருக்கு யுக்தமாகத் தோன்றும் வகைகளில் பிரித்து ஒவ்வொரு வகை நிலத்திலும் மொத்த வருட மகசூல் எவ்வளவு அதிகமாகி இருக்கிறதென்பதை மதிப்பிடுவார்கள். ஒரே தரமுள்ள நிலங்கள், ஒரு கட்டட வேலையிலிருந்து ஒரே அளவு நன்மை அடையக் கூடியவையாக இருந்தால் அவ்வித நிலங்கள் எல்லாம் ஒரே வகையாக பிரிக்கப்படும்.

இச்சட்டம் வருவதற்கு முன்பே மேற்சொன்ன நீர்ப்பாசன வேலைகளோ வடிகால் வேலைகளோ முடிந்திருந்தால், இச் சட்டத்திற்கு முன் உள்ள மூன்று வருட விலைவாசியைக் கொண்டு மகசூலின் சராசரி விலை நிர்ணயம் செய்யப்படும். இச் சட்டத்திற்குப் பிறகு பூர்த்தியாகும் வேலைகள் சம்பந்தப்பட்டவரையில், அவ்வேலைகள் முடிந்த காலத்திற்கு முன் உள்ள மூன்று வருடங்களின் விலைவாசியைக் கொண்டு மகசூலின் சராசரி விலை நிர்ணயம் செய்யப்படும். ஆனால் 1939-ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் விலை எப்படி இருந்ததோ அதற்கு மூன்று மடங்குக்குமேல் சராசரிவிலை நிர்ணயம் செய்யப்படமாட்டாது.

மேற்கண்டபடி கணக்குச் செய்து, ஒரு நிலத்தின் மொத்த மகசூலானது சர்க்காரின் முன்சொல்லிய நீர்ப்பாசன வடிகால் வேலைகளினால் ஒரு வருடத்திற்கு எவ்வளவு அதிகமாயிற்றென்று நிர்ணயம் செய்யப்படும். அதைப் போலப்பத்துமடங்குத் தொகையைதான் அந் நிலத்தின் விலை ஏற்றமாகக் கருதப்படும். பிறகு சர்க்கார் நீர்ப்பாசன வேலைகளின் அனுகூலத்தை அடையும்படி செய்ய அந்த நிலக்காரருக்கு எவ்வளவு செலவு ஆயிற்றென்பதை கணக்குச் செய்வார்கள். விலை ஏற்றத்தில் இச் செலவை நீக்கி மிகுதி இருக்கும் தொகையில் சரிபாதித் தொகைதான் 'அபிவிருத்திக் கட்டண'மாக விதிக்கப்படும். ஏற்கனவே புன்செய் சாகுபடி செய்யப்பட்டு, சர்க்காரின் வேலைகளின் அனுகூலத்தை அடையும் பொருட்டு அந் நிலங்களில் நன்செய் மகசூல் சாகுபடி செய்யப்பட்டால், புஞ்சை சாகுபடி செய்வதற்கும் நன்செய் சாகுபடி செய்வதற்குமுள்ள செலவு வித்தியாசத்தை மொத்த மகசூல் அதிகரிப்பிலிருந்து நீக்கியே நில விலை ஏற்றம் எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்படும். இதை எப்படி கணக்குச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி விதிகள் ஏற்படும்.

ஒவ்வொரு வகை நிலத்திற்கும் ஒரு ஏகருக்கு அபிவிருத்திக் கட்டணம் எவ்வளவு என்று ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும்; விதிகளால் குறிப்பிடப்படும் வேறு வகைகளிலும் பிரசுரம் செய்யப்படும். ஆனால் இவ்விதம் அபிவிருத்திக் கட்டணம் முடிவாக நிர்ணயம் செய்யப்படுவதற்கு முன், அப்படி நிர்ணயம் செய்யவேண்டிய அதிகாரியானவர், தாம் உத்தேசித்திருக்கும் கட்டண விகிதங்களை, விதிகளின்படி பிரசுரம்செய்து, அபிப்பிராயங்களையும் ஆட்சேபணைகளையும் சொல்லிக்கொள்ள அவகாசம் கொடுத்து அவற்றையும் கவனித்து பிறகுதான் முடிவாக அபிவிருத்திக் கட்டண விகிதத்தை நிர்ணயம் செய்யவேண்டும்.

## அப்பீல் உண்டு

அபிவிருத்திக் கட்டணத்தை நிர்ணயம் செய்யவேண்டிய அதிகாரியின் முடிவுக்கு மேல் அப்பீல் உண்டு. அப்பீல் எந்த அதிகாரியிடம் தாகல் செய்யப்படவேண்டுமென்று விதிகளில் குறிப்பிடப்படும். அப்பீல் அதிகாரியின் முடிவும் விதிகளின்படி பிரசுரம் செய்யப்படும்.

மேலே கண்ட அப்பீல் தீர்மானத்திற்குட்பட்டு, அபிவிருத்திக் கட்டண விகிதம் எவ்வளவு என்று செய்யப்பட்ட உத்தரவானது முடிவானது; நிலத்தில் பாத்தியமுள்ள யாவரையும் அது கட்டுப்படுத்தும். மேலும் அபிவிருத்திக் கட்டணம் சரி அல்ல என்ற கட்சியைக் கேட்க எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரமில்லை. (தொடரும்)




இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித் தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர, ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப் பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

## இந்துப் பெண்களுக்குச் சொத்துரிமை உண்டா?

31. கேள்வி: (வரதராஜன் — மாயூரம்.) இந்துச் சட்டப்படி இந்து மதத்தைச் சார்ந்த பெண்களுக்குச் சொத்துரிமை உண்டா? ஷ பாத்தியம் உண்டு என்று எப்பொழுது சட்டம் செய்யப்பட்டது?

பதில்: கேள்வி மிகப் பொதுவாக இருக்கிறது. எவ்வளவோ சந்தர்ப்பங்களில் பழைய இந்துச் சட்டப்படிக்கே ஸ்திரீகளுக்குச் சொத்துரிமை உண்டு. ஆண்களைப் போலவே பெண்களும் சொத்துக்களைச் சம்பாதித்து வைத்துக்கொண்டு இஷ்டப்படி விநியோகம் செய்ய உரிமை உண்டு. தவிர ஸ்திரீகளுக்கு வார்சு பாத்தியமும் உண்டு. உதாரணமாக — ஆண் மக்களோ, ஆண் மக்கள் மூலம் பேரனோ, பேரனின் ஆண்மக்களோ இல்லாமல் தனிச் சொத்து வைத்து இறந்துபோகும் இந்துவுக்கு அவருடைய மனைவியும், மனைவியின் ஆயுளுக்குப் பின் இறந்தவருடைய பெண்மக்களும் வார்சுகளாவார்கள். பெண்களுக்குப் பிறகு இறந்தவருடைய தாய் இருந்தால் அவள்தான் அடுத்த வார்சு என்று வார்சுக் கிரமம் இருக்கிறது. 1929-ம் வருடத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. (இந்து வார்சு பாத்திய திருத்தச் சட்டம்.) இச்சட்டப்படி இறந்தவருடைய மகனின் பெண், பெண்ணின் பெண், சகோதரி, இம்மூன்று ஸ்திரீ உறவினர்களுக்கும் சகோதரி மகனுக்கும் வார்சு பாத்தியம் அளிக்கப்பட்டது. அதாவது வார்சு கிரமத்தில் இறந்தவருடைய பாட்டனுக்குப் பிறகு மேற்கண்டவர்கள்தான் வார்சுகளாவார்கள். பிறகு, 1937 இந்து ஸ்திரீகளுக்குச் சொத்துரிமை அளிக்கும் சட்டம் ஒன்று வந்தது. (இந்து ஸ்திரீகள் சொத்துரிமைச் சட்டம்) இச்சட்டப்படி ஒரு இந்து இறந்தவுடன், அவருடைய மனைவிக்கு உடனேயே வார்சு பாத்தியம் அளிக்கப்பட்டது. அதாவது இறந்தவருக்கு ஆண் மக்கள் இருந்தாலும் மகனைப்போலவே இறந்தவருடைய மனைவிக்கும் சொத்தில் ஒரு பாகம் கொடுக்கப்பட்டது. வார்சு பாத்தியமுள்ள ஸ்திரீ வார்சுகள் யாவருக்கும் ஆயுள்வரைச் சொத்தை அனுபவிக்கும் பாத்தியம்தான் சாதாரணமாக உண்டு.

இப்பொழுது இந்து வார்சுரிமைச் சட்டம் ஒன்று புதிதாக வந்துகொண்டிருக்கிறது. டில்லி பார்லிமெண்டு சபைகளில் இது நிறைவேற்றப்பட்டுள்ளது. ஜனாதிபதி அவர்கள் இதை அங்கீகாரம் செய்த

பிறகு இச்சட்டம் இன்னும் சில நாட்களில் அமுலுக்கு வரும். இறக்கும் இந்துவின் வார்சுக்கிரமத்தில் இச்சட்டத்தால் பல புதிய மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்திரீகள் சம்மந்தப்பட்ட வரையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படுகிறது. இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு இறக்கும் இந்துவுக்கு ஆண் மக்கள் இருந்தாலும், அந்த ஆண் மக்களுடன் பெண்மக்களுக்கும் இச்சட்டத்தால் வார்சு பாத்தியம் அளிக்கப்படுகின்றது. இச்சட்டப்படி, பெண் வார்சுகள் அடையும் சொத்துக்களை அவர்கள் ஆண் மக்களைப் போலவே விற்கச்சுட பாத்தியங்களுடன் அடைகின்றனர். (இச்சட்டம் வந்தவுடன், "வக்கீல்" பத்திரிகையில் இது விவரமாக விளக்கப்படும்.)

### சுவீகாரம் போனவருடைய சொத்துக்கு வார்சு யார்?

32. கேள்வி: (வெங்கடராமன்—மதுரை) ஒரு இந்து குடும்பத்தில் கணவன் மனைவி ஆகிய இருவரும் தங்களுக்குக் குழந்தைகள் இல்லாத காரணத்தினால் ஒருவரை சுவீகாரம் எடுத்துக்கொண்டு சில காலம் கழித்து அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். அவர்களுக்குப் பின்பு அச்சொத்தை சுவீகார புத்திரன் அடைந்து விட்டான். அவனுக்கு கல்யாணம் ஆகவில்லை. வயது 50 ஆகிறது. சுவீகாரம் அடைந்த தாய்க்கு சகோதரரும், சகோதர மக்களும் இருக்கிறார்கள். இந்நிலையில் அச்சொத்தானது சுவீகாரப் புத்திரன் இறந்த பிறகு சுவிகாரத் தாயின் சகோதரருக்கு பாத்தியபட்டதா, சுவிகார புத்திரனின் உடன்பிறந்த சகோதரருக்கு பாத்திய பட்டதா? யார் உண்மையான வாரிசுதார்? சுவீகாரம் எடுத்துக்கொண்டவருக்கு பங்காளிகளோ, உறவினர்களோ இல்லை. இந்த நிலையில் இச்சொத்துக்கு வாரிசுதார் யார்? சுவீகார புத்திரன் இச்சொத்தை வில்லங்கப்படுத்தலாமா?

பதில்: இந்துச் சட்டப்படி சுவீகாரம் ஏற்பட்டவுடன் சுவீகாரம் சென்றவருக்கு ஜனகவழியில், அதாவது அவர் பிறந்த வழியில் உள்ள உறவு முறை வார்சு பாத்தியங்கள் எல்லாம் கத்தரிக்கப்படுகின்றன. சுவீகாரம் எடுத்துக்கொண்டவருக்குச் சொந்த மகன் இருந்தால் எப்படியோ அதேவித பாத்தியங்கள்தான் சுவீகார மகனுக்கும். ஆகையால் — சுவீகார மகன் தாம் உயிருடன் இருக்கும் போதே தம்முடைய சொத்துக்களை செட்டில்மெண்டு மூலமாகவோ, உயில் மூலமாகவோ எவருக்கும் கொடுத்து விடவும், விற்பனை, அடமானம் முதலிய பராதீனங்கள் செய்யவும் அவருக்குப் பூர்ண உரிமை உண்டு. சுவீகார மகன் இறந்தவுடன் சுவீகார வழியில் உள்ள வார்சுகள்தான் அவருடைய சொத்தை அடைவார்கள். சுவீகாரத் தாயின் சகோதரர்தான் வார்சு. சுவீகாரப் புத்திரனுடைய உடன்பிறந்த சகோதரருக்கு வார்சு பாத்தியம் இல்லை.

33. கேள்வி: (சந்தா நெம்பர் — 2810. தி. அட்சயம், கீவளூர்) ஒரு இந்துக் குடும்பத்திலிருந்து ஒருவரை அபிமானமாக ஒருவர் எடுத்துக்கொண்டால் அபிமானமாகச் சென்றவருக்கு தன் சொந்த தகப்பனார் சொத்தில் பாத்தியம் உண்டா?

பதில்: சட்ட பூர்வமாக சுவீகாரம் செய்து கொள்ளப்பட்டவர்தான் தன் சொந்தத் தகப்பனாருடைய சொத்தில் பாத்தியத்தை இழப்பார். சுவீகாரம் எடுக்கப்படாமல் வெறும் 'அபிமான புத்திர'னென்று வேறு ஒருவரால் வளர்க்கப்படும் நபர்களுக்குத் தன் சொந்தத் தகப்பனுடைய சொத்தில் உள்ள பாத்தியம் போகாது.

### சிலோன் அகதிகளுக்கு விற்பனைவரி விதிவிலக்கு உண்டா?

34. கேள்வி: (S. நாராயணன் — விருதுநகர்) சிலோன் அகதியாக வந்தவர்கள் இந்தியாவில் வியாபாரம் செய்தால், விற்பனை வரியினின்று விதிவிலக்கு அளிக்கப்படுமா?

பதில்: விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 6 (1) (ii) என்ற ஷரத்தின் படி, குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நபர்களுக்கு விற்பனை வரி முற்றிலுமோ ஒரு பாகமோ கிடையாதென்று விதிவிலக்கு அளிக்கச் சென்னைச் சர்க்காருக்கு அதி இருக்கிறது. ஆனால் இதுவரை கேள்வியில் கண்ட நபர்களுக்கு எவ்வித விதிவிலக்கும் அளிக்கப்படவில்லை.

[பின் 22-ம் பக்கம் பார்க்க]



# வழக்கும் தீர்ப்பும்

[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும்.]

**இந்துக் குடும்பத் தலைவர், குடும்பத்திற்காகச் சொத்து வாங்கினர். ஒரு கெடுவுக்குள் கிரயம் செய்தவர் கிரயத்தொகையைக் கொடுத்து விட்டால், அச்சொத்தை அவருக்கே மறுசாசனம் செய்துவிடுவதாக அப்போதே ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துமா? அவசியமில்லாமல் குடும்பத்தலைவர் குடும்பச் சொத்தை மறு கிரயம் செய்ய முடியுமா?**

*[ஆதாரம் :— சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு. பிரதம நீதிபதி ராஜமன்னர் அவர்களும் உயர் நீதிபதி ராஜகோபாலய்யங்கார் அவர்களும் L. P. A. 121 of 1951 நவம்பரில் 18—2—1955ல் அளித்த தீர்ப்பு, 68 லா வீக்லி 515.]*

சீனுவாசலு நாயுடு என்பவர் ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தலைவர். அவர் தம்முடைய குடும்பத்திற்காக 9-5-1937ல் ராஜு நாயக்கர் வகையருவிடமிருந்து ரூ. 5000க்கு ஒரு சொத்தைக் கிரயம் வாங்கினர். கிரயப் பத்திரத்தை சீனுவாசலு நாயுடு தம்முடைய பெயரில் எழுதிக்கொள்ளாமல், அவருடைய தம்பி கேசவலு நாயுடுவின் பெயரில் எழுதி வாங்கிக்கொண்டார். பிரிபடாத இந்துக் குடும்பத்திற்குச் சொத்துவாங்கும்போது கிரயசாசனம் யார் பெயரில் ஏற்பட்டாலும் ஒன்றுதான்; சொத்துக்கள் குடும்பப் பொதுச் சொத்துக்களேயாகும். கிரய சாசனம் ஏற்பட்ட சில நாட்களுக்குள் அதாவது 14-9-1937ல் சீனுவாசலு நாயுடு ராஜு நாயக்கர் வகையருவுக்கு ஒரு 'எக்ரிமெண்ட்' எழுதிக் கொடுத்தார். அதாவது, கிரயத் தேதியிலிருந்து 10 வருட கெடுவுக்குள் சொத்தை வீற்றவர் கிரயத் தொகை ரூ. 5000-யும் கொடுத்துவிடும் பட்சத்தில், கிரய சொத்தை வீற்றவர்களுக்கே தாமும் தம்முடைய தம்பியும் மறுசாசனம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அந்த 'எக்ரிமெண்ட்' எழுதிக் கொடுத்தார். தம்முடைய குடும்ப மானேஜர் என்ற முறைமையில் தாம் அந்த 'எக்ரிமெண்டை' எழுதிக் கொடுப்பதாகவும் சீனுவாசலு நாயுடு அதில் கண்டிருந்தார்.

சொத்தைக் கிரயம் செய்த ராஜு நாயக்கர் வகையரு, எக்ரிமெண்டில் கண்ட 10 வருட கெடுவுக்குள், எக்ரிமெண்டு ஷரத்துப்படி தொகை வாங்கிக்கொண்டு கிரயச் சொத்துக்களை சீனுவாசலு நாயுடு வகையரு தங்களுக்கு மறுசானம் செய்து கொடுக்க வேண்டுமென்று கோர்ட்டில் தாவா செய்தனர்.

சொத்தைக் கிரயம் பெற்ற சீனுவாசலு நாயுடுவின் குடும்பத்தினர்களுடைய கட்சி என்னவென்ருல் — தங்களுடைய குடும்பத்திற்காகக் குடும்பத் தலைவரான சீனுவாசலு நாயுடு சொத்துக்களை வாங்கியது சரி; ஆனல் குடும்பச் சொத்துக்களை விற்பனை செய்யவேண்டிய அவசியமோ நிர்பந்தமோ ஒன்றுமில்லை. இந்துக் குடும்பச் சொத்துக்களை அதன் தலைவர் இஷ்டப்படி விற்பனை செய்துவிட முடியாது; ஏதாவது குடும்ப அவசியம்

இருந்தால்தான் குடும்பச் சொத்தைக் கிரயம் செய்யக் குடும்பத்தலைவருக்குச் சட்டப்படி உரிமை உண்டு. ஆகையால் சீனுவாசலு நாயுடுவுக்குக் குடும்பச் சொத்துக்களை மறு சாசனம் செய்துகொடுப்பதாக எக்ரிமெண்டு செய்து கொடுக்கவே உரிமை இல்லை — என்பதுதான் அவர்களுடைய கட்சி.

இக் கட்சியை உயர் நீதிபதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. தம்முடைய குடும்பத்திற்காக சீனுவாசலு நாயுடு அச் சொத்துக்களைக் கிரயம் வாங்கியதும், மறு கிரயம் செய்துகொடுப்பதாக ஒப்புக் கொண்டதும் ஒரே ஏற்பாட்டை அனுசரித்துச் செய்து கொண்ட தாஸ்தவேஜுகளேயாகும். இவை இரண்டும் சம்பந்தமில்லாத தனித் தனி தஸ்தவேஜுகளல்ல. சொத்தைக் கிரயம் செய்தவர்கள் அதற்குப் பிரதிப் பிரயோஜனமாக ரூ. 5000 மட்டில் வாங்கிக்கொள்ளுவதாக பேரம் செய்யவில்லை. ரூ. 5000 - மும், தங்களுடைய சொத்துக்களைத் தங்களுக்கே மறு கிரயம் செய்து கொடுப்பதாக கிரயதார் சம்மதித்த 'எக்ரிமெண்டும்' இரண்டும் சேர்ந்தேதான், கிரய சாசனத்தின் பிரதிப் பிரயோஜனமாகும். மறு சாசன 'எக்ரிமெண்ட்' இல்லாமல் வெறும் ரூ. 5000க்கு மட்டில் கிரய சாசனம் செய்ய ராஜு நாயக்கர் வகையரு சம்மதித்திருக்கவே மாட்டார்கள். ஆகையால் சாசனத்தை ஒப்புக்கொள்ளும் சீனுவாசலு நாயுடுவின் குடும்பத்தினர்களை, மறுசாசன எக்ரிமெண்டும் கட்டுப்படுத்தும். சொத்துக்களை வாங்கியவர்கள் 'எக்ரிமெண்ட்டு'ப்படி மறு சாசனம் செய்துகொடுக்க வேண்டுமென அபிப்பிராயப்பட்டு உயர் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

**விற்பனை வரிச்சட்டப்படி லைசென்சு வாங்கிக்கொண்ட மில் நூல் வியாபாரி கள்ளமார்க்கெட்டில் பெருத்த வியாபாரம் செய்தார். அவர் வரி அதிகாரிகளுக்குக் காண்பித்தது ஒரு தனிக் கணக்கு. அவருடைய லைசென்சை ரத்து செய்யாமலே, அவருக்கு விற்பனை வரி விதித்தது செல்லுமா ?**

*[ஆதாரம் :— சென்னை ஹைகோர்ட்- உயர் நீதிபதிகள் மாக் அவர்களும் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் S. A. 2038, 2039 of 1950 நம்பர்களில் அளித்த தீர்ப்பு. - 68 லா வீக்லி 508.]*

மில்நூல் வியாபாரி ஒருவர் சென்னைப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 5ல் கண்டபடி மில் நூல் வியாபாரம் செய்ய விற்பனை வரி அதிகாரிகளிடமிருந்து லைசென்சு வாங்கிக்கொண்டு வியாபாரம் செய்தார். லைசென்சு பீசுக் கட்டணம் கட்டி லைசென்சு வாங்கிக் கொண்டவர்களுக்கு சட்டப்படி விற்பனை வரி விதிக்கப்படமாட்டாது.

20-9-1944 அன்று திடீரென்று இவ் வியாபாரியின் கடையை விற்பனை வரிச் சட்ட அதிகாரிகள் சோதனை செய்தனர். வியாபாரியின் கடையில் இரண்டு 'செட்' கணக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. மில் நூல் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தபடியால் கட்டுபாடு விலைப்படி விற்பனை செய்ததாக ஒரு பொய்க் கணக்கும், அவ் வியாபாரி ஏராளமான அதிக விலைக்குக் கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்ததற்கு ஒரு உண்மைக் கணக்கும், இரண்டும் அகப்பட்டன. மில் நூல் கட்டுப்பாடு உத்தரவுகளை மீறியதாக அவ்வியாபாரியின்மீது சர்க்காரால் கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு, அவ்வியாபாரிக்கு ஆறுமாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கிரிமினல் வழக்கு நடந்துகொண்டிருக்கும் போதே விற்பனை வரி அதிகாரி அவ் வியாபாரிக்கு விற்பனை வரியும் விதித்தார். அதாவது அவ்வியாபாரி 1942-43 வருடத்தில் 66 லட்ச ரூபாய்க்கு நூலில் மொத்த வியாபாரம் செய்திருக்கிறார் என்றும்; 1943—44ல் மூன்று லட்சத்தி அறுபத்தி நாலாயிர ரூபாய்க்கு மொத்த வியாபாரம் செய்திருக்கிறார் என்றும் அவருக்கு

விற்பனை வரி விதிக்கப்பட்டது. முதல் வருடத்திற்கு அவ் வியாபாரி கொடுக்க வேண்டிய விற்பனை வரி ரூ. 37,039-6-9, அடுத்த வருட வரி ரூ. 3,140.

இவ்விதம் தம் பேரில் விற்பனை வரி விதித்தது சட்டப்படி செல்லாதென்று அவ்வியாபாரியானவர் சர்க்கார் பேரில் இரண்டு தாவாக்களைத் தொடர்ந்தார். அவருடைய கட்சி என்னவென்றால் - விற்பனை வரிச் சட்டப்படி மில் நூல் வியாபாரம் செய்ய லைசென்சு வாங்கிக்கொண்டவர்களுக்கு அவருக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சு ஊர்ஜிதத்திலிருக்கும் வரை அவர் எவ்வளவு மொத்த வியாபாரம் செய்திருந்தாலும் விற்பனைவரி கிடையாதென்றும்; சில காரணங்களுக்காக விற்பனை வரி அதிகாரிகள் தம்முடைய லைசென்சை வேண்டுமானால் ரத்து செய்து, லைசென்சு ரத்தான தேதிக்குப் பிறகு ஏற்படும் விற்பனைகளுக்கு மட்டில் விற்பனை வரி போடலாமே ஒழிய, லைசென்சு ஊர்ஜிதத்தில் இருக்கும் வரையில், வரிபோட விற்பனை வரிச் சட்டத்தில் இடமில்லை என்பதுதான் அவ்வியாபாரியின் தாவா. இவருடைய தாவா சரி என்று சப்ஜட்ஜும் முதல் அப்பீலில் ஜில்லா ஜட்ஜும் அபிப்பிராயப்பட்டு, விற்பனைவரி அதிகாரிகள் லைசென்சு வாங்கியவருக்கு, லைசென்சை ரத்து செய்யாமல், விற்பனைவரி விதித்தது செல்லாதெனத் தீர்ப்பளித்தனர். சர்க்காரால் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. அப்பீலை விசாரித்த இரண்டு உயர் நீதிபதிகள் அவர்களும் அவ்வியாபாரியின் லைசென்சு ரத்து செய்யப்படாமலிருந்தாலும், அவருடைய மொத்த வியாபாரத் தொகைக்கு வரி விதித்துவிட விற்பனைவரி அதிகாரிகளுக்கு உரிமை உண்டென்று அபிப்பிராயப்பட்டு, வாதியின் தாவாக்கள் செலவு தொகையுடன் தள்ளப்பட்டன.

பொது விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 3- ன்படி வருடத்தில் ரூ. 10000 அல்லது அதற்கு மேல் மொத்த வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு ரூபாய் ஒன்றுக்கு இவ்வளவு என்று விற்பனைவரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொது விதிக்கு சில விதி விலக்குகள் உண்டு. செக்ஷன் 5ல் இருப்பது ஒரு விதி விலக்கு. அதாவது மில் நூல் முதலிய அதில் கண்ட சில சரக்குகளை விற்பனை செய்ய ஒரு வியாபாரியானவர் விதிகளின் படி லைசென்சுக் கட்டணம் கட்டி 'லைசென்சு' வாங்கிக் கொண்டு விட்டால், அவருக்கு விற்பனை வரி கிடையாது. அவர் லைசென்சு பீசு கட்டியதே போதும். இது ஒரு சலுகை. ஆனால் விதிகளால் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்குட்படுபவர்களுக்குத்தான் இச் சலுகை உண்டென்று செக்ஷன் 5 லேயே இருக்கிறது. விதிகளின்படி கொடுக்கப்படும் 'லைசென்சி'ல் ஒரு நிபந்தனை இருக்கிறது. அதாவது, லைசென்சு கொடுக்கப்படும் வியாபாரியானவர் விற்பனை வரிச் சட்டத்திலும் விதிகளிலும் கண்ட ஷரத்துக்களின்படி நடந்து கொள்ளவேண்டியதென்ற நிபந்தனைக்குட்பட்டு அவருக்கு 'லைசென்சு' கொடுக்கப்படுவதாகக் கண்டிருக்கிறது. ஒவ்வொரு வியாபாரியும் உண்மையான கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 13- என்ற ஷரத்தில் இருக்கிறது. பிரஸ்தாப வியாபாரியானவர் இந்த ஷரத்தின்படி நடக்கவில்லை. அவர் பொய்க் கணக்கு வைத்துக் கொண்டிருந்தார். ஆகையால் லைசென்சில் கண்ட சலுகை அவருக்குக் கிடையாது. சட்ட ஷரத்துக்களை மீறி நடப்பவர்களுக்கு லைசென்சு இருந்தும் பிரயோஜனமில்லை. அவருக்கு லைசென்சில் கண்ட சலுகை போய்விடும். லைசென்சை ரத்து செய்யவும் விற்பனைவரி அதிகாரிகளுக்கு வேறு ஒரு

விதியின்படி அதிகாரம் இருந்தாலும், அவர்கள் அப்படிச் செய்யவேண்டுமென்ற அவசியமில்லை. லைசென்சை ரத்து செய்யாமலே, லைசென்சின் நிபந்தனைகளின்படி நடக்காதவர்களுக்கு, விற்பனை வரி விதிக்க வரி அதிகாரிகளுக்கு உரிமை உண்டென்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். பிரஸ்தாப வழக்கில் அவ்வியாபாரியின் லைசென்சை ரத்து செய்யாமலே, அவருக்கு உண்மையான மொத்த வியாபாரத் தொகை மீது விற்பனை வரி அதிகாரிகள் வரி விதித்தது சட்டப்படி சரியே என்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு வாதியின் தாவாக்கள் செலவு தொகையுடன் தள்ளப் பட்டன.

[குறிப்பு:— ஒரு வியாபாரிக்குக் கொடுக்கப்படும் 'லைசென்சு' ரத்து செய்யப்படாமலிருக்கும் வரையில் அவருக்கு விற்பனை வரி விதிக்கக் கூடாதென்று இவ் வழக்கில் சப்ஜட்ஜ் அவர்கள் தீர்ப்பளித்த பிறகு, விற்பனை வரிச் சட்டத்தில் செக்ஷன் 6A என்ற ஒரு புது ஷரத்து 1947ல் சேர்க்கப்பட்டது. அதாவது லைசென்சு ரத்து செய்யப்படாமல் இருந்தாலும் இச்சட்ட ஷரத்துக்களையோ, விதிகளையோ, லைசென்சின் நிபந்தனைகளையோ மீறும் வியாபாரிகளுக்கு வருட ஆரம்பத்திலிருந்தே அவர்களுடைய மொத்த வியாபாரத்தின் பேரில் விற்பனை வரி விதிக்கலாமென்று செக்ஷன் 6A சேர்க்கப்பட்டது. இவ்விதம் ஒரு புதிய ஷரத்து சேர்க்கவே அவசியமில்லை என்றும்; பழைய ஷரத்துக்களின்படியே லைசென்சு ரத்து செய்யப்படாமலிருந்தாலும் நிபந்தனை மீறியவருக்கு வரி விதிக்கும் அதிகாரம் இருக்கிறதென்றும் உயர் நீதிபதிமாக் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர்.]

[கேள்வி—பதில் 18-ம் பக்கத் தொடர்ச்சி]

## ஜீவனாம்சத்திற்கு ஏலம் போன சொத்துக்கள்

35. கேள்வி: (சந்திரகாசன்—நல்லாடை) இந்து ஒருவருக்கு இரண்டு தாரம். முதல் தாரம் இறந்துவிட்டாள். அவளுக்கு ஒரு ஆண் மகன் இருக்கிறான். கணவன் இரண்டாம்தாரம் மணம் செய்துகொண்டார். ஆனால் இரண்டாம் தாரத்திற்கும் கணவனுக்கும் தகராறுகள் ஏற்பட்டு இரண்டாம்தார மனைவியானவள் கணவன்மீது ஜீவனாம்ச தாவா செய்து ஜீவனாம்ச டிக்ரி ஏற்பட்டது. மேல் கோர்ட்டுகளுக்குக் கணவன் அப்பீல் செய்தும் பலிக்கவில்லை. இரண்டாவது மனைவி ஜீவனாம்ச டிக்ரியை நிறைவேற்றி கணவனுக்குள்ள சுவல்ப சொத்துக்களைத் தாமே கோர்ட் ஏலத்தில் எடுத்துவிட்டாள். இப்போது கணவன் இறந்துவிட்டார். அவருக்கு வயதான தாயாரும் முதல் தாரத்து 19 வயது ஆண் மகனும் இருக்கிறார்கள். இவர்களுக்கு வேறு ஆதரவு கிடையாது. ஏலத்தில் சொத்துக்களை எடுத்த இரண்டாவது தார மனைவியானவள் அச்சொத்துக்களை விற்றுவிடப் போவதாகச் சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் முதல் தாரத்தின் மகன் மைனர் வியாஜ்யம் செய்யலாமா? ஏலம் போன சொத்துக்கள் கட்டுப்படுமா?

பதில்: இரண்டாம் தார மனைவி ஏலத்தில் எடுத்த சொத்துக்கள் இப்போது அவளுடைய சொந்த சொத்துக்களேயாகும். அச்சொத்துக்களைப் பராதீனம் செய்ய அவளுக்கு உரிமை உண்டு. முதல் தார மகனுக்கோ, இறந்தவரின் தாயாருக்கோ அச்சொத்துக்களில் பாத்தியம் ஏற்படாது. ஜீவனாம்ச டிக்ரியானது மைனரையும் கட்டுப்படுத்தக் கூடியதுதான். மைனர் வியாஜ்யத்தால் ஏலம் போன சொத்துக்களைத் திருப்பமுடியாது.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVADAMARUDUR
AND PUBLISED BY R. NARASIMHAN, B.A., B.L., AT No. 73, DABIR WEST STREET, KUMBAKONAM
FOR THE VAKIL PUBLICATIONS LIMITED, *Editor* V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L.




மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற

—: அறந்தாங்கி :—

# 786 சங்கு சோப்பை




**வாங்கி உபயோகியுங்கள்**
**கட்டி 1-க்கு அணு 0-1-3தான்**

தயாரிப்பவர்:-

**இ.கா.ரு.மு.காதர் நயினு முகம்மது,**
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.

---

## 'ஜெயராம்' ஹெர்னியா கியூர்

**குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள். 3–தினத்தில் குணம் தெரியும்.**


| | | | |
|---|---|---|---|
| எலிமெண்டரி கேஸ் | .... | ரூ. | 6-0-0 |
| செகண்டரி கேஸ் | ... | ரூ. | 11-0-0 |
| அட்வான்ஸ் கேஸ் | .... | ரூ. | 25-0-0 |

**உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.**

From: GEORGE SELVARAJ, / To ***Dr. Jayaram Avl, Kumbakonam.***
Asst. Edward High School, SATTUR.

மகா-ா-ா-ஸ்ரீ டாக்டர் அவர்களுக்கு நமஸ்காரம்.

தாங்கள் அனுப்பிய 'காயசுத்தி ஸ்பெஷல்' லேகியத்தையும் காயசுத்தி பஸ்பத்தையும் 26—1—49 முதல் சாப்பிட்டு வருகிறேன். தகுந்த பக்குவ முறைப் படியும் பத்திய முறைப்படியும் அதன் பலனுக சிறிது மாறுதல் காணப்பட்டு ஆனந்தம் அடைந்தேன். அதாவது முன்பு காலையில் எழுந்து 10 நிமிஷங்களுக்கெல்லாம் குடல் கீழிரங்கிவிடும் ஆனல் இப்போது நான் சுமார் கால் மைல் தூரம் நடந்து சென்று ஸ்னனம் செய்துவிட்டு வந்தபின்பும் வலியோ குடல் இறக்கமோ இல்லை ஆகாரம் சாப்பிட்டபின்தான் சிறிது இறங்குகிறது இதிலிருந்து நான் கூடிய சீக்கிரம் குணமடைய முடியுமென நம்புகிறேன். தற்போது லேகியம் சுமார் இரண்டு மூன்று நாட்களுக்குத்தான் இருக்கும். பூரண சுகம்பெற இன்னுமொரு டப்பா அவசியமென நினைக்கிறேன். ஆகையால் இந்த லெட்டர் கண்டதும் தயவு செய்து மறுதபாலில் காயசுத்தி 'ஸ்பெஷல்' லேகியம் ஒரு டப்பா அவசியம் அனுப்பிவைக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன். காயசுத்தி பஸ்பம் இன்னும் சுமார் 15 நாட்களுக்குப் போதுமான அளவு இருக்கிறது.




சாத்தூர்,
18—2—49.

இப்படிக்கு தங்கள் நன்றியுள்ள,
ஜார்ஜ் செவராஜ்.

**G. ஜெயராம் வைத்தியசாலை, (Regd)**
**28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.**

Regd. No. M. 5399 "THE VAKIL" December 1955


ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்




பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்குக் குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம்,
வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்,
பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*
For Madras
**SURAJ AGENCIES,**
**MADRAS.**

*For Coimbatore, Palghat & Nilgiris:*
**B. BALAPATTABI CHETTIAR,**
249, Vysyal Street
**COIMBATORE.**